www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-SEINE FRANCE

# தூண்டில்




MILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.31

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாருக்காக இந்த யுத்தம்?

ஜோன் - மெரிட்

துப்பாக்கிச் சன்னங்களால் துளையிட்டு சிதிலமடைந்து - போன யாழ் நகர்ச் சுவர்களில் ரகசியமாக ஒட்டப்படும் ஒரு இளம்பெண்ணின் சுவரொட்டிகள். கருமயிர்க் கற்றைகள் வளையமிடும் முகம். சோகமான ஆனால் ஒரு அழகிய சிலையின் தீட்சண்யம் சுடரும் விழிகள்.

கடந்த 1 வருடத்தில் மட்டும் கொலைசெய்யப்பட்ட முப்பதினாயிரம் பேரில் இந்தப்பெண்மணியும் ஒருவர்.

இந்த நாட்டில் ஒன்று கூட்டுப்படுகொலைகள் நடைபெறுகின்றன. அடுத்தது இத்தகைய தனிநபர் கொலைகள் நடந்தேறுகின்றன.

அப்பட்டமான குரூரத்தின் தன்மையைப் பொறுத்தவரை நினைத்தும் பார்க்கமுடியாதளவுக்கு ஒவ்வொரு தொடர்ச்சியான குரூரமான கொலையும் கடைசியாக நடந்துமுடிந்த ஒரு கொலையோடு போட்டியிட்டுப் பார்க்கின்றன.

ஆனால் இந்தப் பெண்ணின் மரணத்தில் நெளிவு, சுழிவு எதுவுமில்லை. இருந்தும் அவளின் சுவரொட்டிகளில் இப்படி ஒரு கேள்வியும் காணப்படுகிறது. ஆனால் இப்படி ஒரு கேள்வி எழுப்பப்படுவது இங்கு வழக்கத்தில் இல்லைதான்.

"ராஜனியைக் கொன்றது யார்?"

ராஜனி திரணகம முப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

த்தைந்து வயதான ஒரு டாக்டர். ஆசிரியை. பதினொரு வயதான நர்மதா, ஒன்பது வயதான ஷாரிகா ஆகிய இரண்டு சிறுமிகளின் தாய்.

ஆனால் அவரைச் சாவு அணைத்தவிதம் சற்று வித்தியாசமானது. அவரது நண்பர் ஒருவர் தெளிவாய் சொல்கிறார்:

"ராஜனி சாதாரண மக்களின் குரலும், அபிலாசைகளும் உரத்து ஒலிக்க வேண்டும் என்று போராடினார். அந்த மக்களின் வாழ்வும், போராட்டங்களும், அவர்களின் குரூரச் சாவுகளும் சின்னாபின்னமாகிப் போன சமுதாயத்தின் சிதைவுகளில் புதைந்து மறக்கடிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் போராடிய பெண் அவர்"

யாழ் பல்கலைக் கழக உடற்கூற்றியல்துறைத் தலைவியான ராஜனி கடந்தவருடம் செப்ரெம்பர் 21ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இருந்து வீட்டிற்குச் சைக்கிளில் திரும்பிக்கொண்டிருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

அப்போதுதான் அவர் இறுதியாண்டு மாணவர்களின் பரீட்சைத் தாள்களைத் திருத்தி முடித்திருந்தார். பல்கலைக்கழகத்திலிருந்து வீட்டை நோக்கிப் புறப்பட்ட சில நிமிசங்களில், ஆறு மணியிருக்கும், சனசந்தடியில்லாத ஒரு இடத்தை அண்மித்த போது ஒரு கொலையாளியால் சுடப்பட்டார்.

முதல் துப்பாக்கிக் குண்டு துளைத்து அவர் உடல் சரிந்த பின்னரும் சாவகாசமாக மேலும் நான்கு ரவைகள் அவர் தலையில் தீர்க்கப்பட்டன.

கொலைகாரன் சுட்டுவிட்டுச் சைக்கிளில் செல்வதைப்பார்த்துக்கொண்டிருந்த இரண்டு மாணவர்கள் அவ்வழியால் வந்த காரொன்றை மறித்தனர்.

சாரதி முதலில் சற்றுப் பயந்தபோதும் பின்னர் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லச் சம்மதித்தார். ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியிலேயே அவர் உயிர் பிரிந்துவிட்டது.

அந்த இரண்டு மாணவர்களும் பயத்தினால் தங்கள் பெயர்களைக் கூடச் சொல்லாமலே மறைந்துவிட்டனர்.

எந்தவித விசாரணையுமில்லாமல் சடலங்களைப் புதைப்ப

---

**இலண்டனிலிருந்து வெளியாகும் 'ஒப்சேவர் மகஸின்' சஞ்சிகையின் 29.04.90ஆம் திகதி வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தொடராகத் தருகிறோம்.**

**- கடலோடிகள்**

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்குச் அனுகூலமாகச் சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ள இந்த நாட்டில் நடைபெறும் பெருவாரியான கொலைகளைப் போலவே ராஜனியின் கொலையும் எந்த விசாரணைக்கும் உட்படுத்தப்படவில்லை.

ராஜனியின் தாயார் மகிழாரூப்பியம் கூறுகிறார்:

"எங்கடை ராஜனி ஒரு முட்டாள்பிள்ளை என்று சனம் சொல்லுது. இவ இங்கை நடக்கிற கொலைகளைப் பற்றி கவலைப்படாமல் தானும் தன்ரை வேலையுமாய் இருந்திருக்கலாம் ஆனால் அவள் யாரும் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டா. சின்னப் பெடியள் துவக்குத் தூக்கிக் கொண்டு திரிவதை அவளால் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. எந்தக் காரணத்துக்காக யார் கொலை செய்தாலும்அது பிழைதான் என்று அடிக்கடி அவள் சொல்லுவாள். இப்ப எங்களுக்கு எங்கடை பிள்ளையும் இல்லை. அவவின்ரை பிள்ளையளுக்கு தாயும் இல்லை"

16 மில்லியன் மக்களைக் கொண்ட இந்நாட்டின் 2/3 பங்கு மக்களால் பேசப்படுகின்ற சிங்களமொழிக்கு ஆதரவாக தமிழ் மொழியை முற்றுமுழுதாக புறக்கணித்து நசுக்கி இலங்கை அரசாங்கமானது தமிழ்ச் சிறுபான்மை இனத்தை சிறிதுசிறிதாக அழித்துவருவதை ராஜனி தன் கண்கூடாகக் கண்டார்.

இந்த அடக்குமுறை மோசமாகிக்கொண்டு வந்த போது எல்.ரி.ரி.ஈ.யின் தமிழினப்பாதுகாப்பு, சுயநிர்ணய உரிமை ஆகிய இலட்சியங்களுடன் ராஜனியும் தன்னை இணைத்துக் கொண்டது இயல்பானதே.

ஆனால் பின்னாளில் புலிகளின் சீரழிவுப் போக்கிற்கு எதிராக குரல் கொடுக்கத் தொடங்கினார். "சனங்களைப் பற்றி ஒரு துளியும் அக்கறை இல்லாமல் இளைஞர்களைப் பயன்படுத்திக் கொண்ட ஒரு வெறும் இராணுவ அமைப்பே புலிகள் இயக்கம்" என்று அவர் கருதினார்.

ராஜனியின் அம்மா ராஜனி இப்போதும் உயிரோடிருப்பதைப் போலவே நிகழ்காலத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்.

"கொலைகள் நிறுத்தப்படவேண்டும் என்று ராஜனி உறுதியாக இருந்தாள். ஆயுத வன்முறையை அவள் எதிர்த்து நின்றாள்" என்கிறார் மகிழா.

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை. ராஜனியின் தாயார் மகிழா ரூப்பியம். பக்கத்தில் அவர் கணவர் ராஜசிங்கம். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் உப அதிபரும், தற்போது தனியார் வைத்தியசாலையொன்றில் உயர்நிர்வாகியாகவும் பணியாற்றிவருபவர்.

தேவாலயத்திற்குச் சென்றுவிட்டு வந்து தமது வீட்டின் முன் விறாந்தையில் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறார்க

www.tamilarangam.net


ள். வீட்டிலிருந்து பார்க்க அயலில் உள்ள எல். ரி. ரி. ஈ முகாம் தெரிகிறது. நாட்டு நிலைமைக்குப் பயந்து வெளிநாடு சென்றுவிட்ட இவர்களது உறவினர்களின் வீடொன்றைத்தான் புலிகள் தமது முகாமாக்கி இருக்கிறார்கள்.

மகிழா கூறுகிறார்:

"எங்களுக்குப் பயமாக இருக்கிறது. யார் மகளைக் கொன்றது என்று நிச்சயப்படுத்தாமல் இருப்பதே நல்லது. எங்களுக்கு வயது போய்விட்டது. நாங்கள் இந்த வீட்டைவிட்டு எங்கு தான் போவது? யாரையும் குற்றம் சொல்லி என்ன ஆகிவிடப் போகிறது? எங்களுக்கு எங்கடை பிள்ளை என்ன திருப்பிக் கிடைக்கவா போகிறது?"

ராஜசிங்கம் அயலில்உள்ள எல். ரி. ரி. ஈ. யின் முகாமைச் சுட்டிக்காட்டிவிட்டுக் கூறுகிறார்:

"புலிகள் அந்த வீட்டுக்கு வருமுன்பு, ஒரு வருசத்துக்கும் - மேலாக இந்தியப் படையினர்- தான் அங்கு தங்கியிருந்தனர். அப்போது ராஜனி எழுதி வைத்திருந்த குறிப்புகளையும், கொலைகளைப் பற்றி அவள் திரட்டிவைத்திருந்த அறிக்கைகளையும் அவர்கள் வந்து எடுத்துச் சென்றனர். அதற்கு முன்னர், இலங்கை இராணுவம் எங்கள் வீட்டிற்குள் புகுந்து எங்கள் உடைமைகளை நாசமாகக்கிவிட்டுச் சென்றனர் எங்கள் குடும்பப் படங்களைக்



"தலைவா, நீங்கள் சொன்ன அத்தனை பேரையும் கொன்றுவிட்டேன். அடுத்து யாரைக் கொல்ல வேண்டும்? கட்டளையிடுங்கள். நிறைவேற்றி விடுகிறேன்"

"உனக்கு நீயே வெடி வைத்துச் செத்துவிடு"

"நான் எந்தத் தவறும் செய்யவில்லையே? இதுவரைக்கும் உங்களிடம் விசுவாசமாக நடந்த என்னை ஏன் சாகச் சொல்லுகின்றீர்கள்?"

"எங்களிடம் கேள்வி கேட்ட அனைவரையும் கொல்லச் சொன்னோம். கொன்றாய். இனிமேல் யாரைத் தட்ட வேண்டுமென நீயே எங்களிடம் கேள்வி கேட்கிறாய். உன்னை என்னவென்று தட்டாமல் விடுவது? எங்களிடம் என்ன கேள்வி எவர் கேட்டாலும் அவர் தப்ப முடியாது. ம்... சொன்னதைச் செய்"

- விமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட அவர்கள் விட்டு வைக்க வில்லை"

இலங்கை அரசபடையினர் ராஜனியின் மூத்த சகோதரியை அப்போது தேடிக் கொண்டிருந்தனர். யாழ்ப் பல்கலைக்கழகத்தில் போதனாசிரியையாய இருந்த அவர் இப்போது லண்டனில் புகலிடம் கோரியுள்ளார்.

எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களுக்கு தமது வீட்டில் அடைக்கலம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒரு டாக்டர், மூன்று மதகுருமார்களுடன், ராஜனியின் சகோதரியும் கைது செய்யப்பட்டிருந்தார். வெலிகடைச் சிறைக்குள் நடைபெற்ற படுகொலையிலிருந்து தப்பிய ஒரு சிலரில் இவரும் ஒருவர்.

"குணங்குறி எதுவுமில்லாமல் சகட்டுமேனிக்கு ஒருவரையொருவர் சுட்டுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் எங்கள் ராஜனியை யார் கொன்றது என்று கேட்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?" என்று கேட்கிறார் ராஜசிங்கம்.

"ராஜனி மிகவும் நேர்மையான பிள்ளை. இலங்கை அரசும், இந்தியப்படையும் நடத்திக் கொண்டிருந்த மாணவப் படுகொலைகளைப் பற்றி ஒருவிசாரணையை மேற்கொள்ள வேண்டுமென்ற தனது யோசனையைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்க மறுத்தபோது ராஜனி ஒரு முறை அழுதவாறே பல்கலைக்கழக செனற் கூட்டத்திலிருந்து — வெளியேறினார். தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமல்ல, சிங்கள மக்கள் மத்தியிலும் அவர் டாக்டராகப் பணியாற்றினார். அவ்வாறு அவள் வேலை செய்திருக்க வேண்டியதில்லை என்று கருத்துத் தெரிவித்தவர்களும் உண்டு.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலும் இரவு பகலாக முழு மூச்சுடன் அவள் வேலை பார்த்தாள் நான் பணிபுரியும் தனியார் வைத்தியசாலைக்கு ராஜனி வரும்போதும் அங்குள்ள ஏழைகளைப் பார்த்து, இங்கு ஏன் வருகிறீர்கள்? அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் செல்லுங்கள். அங்கு வந்து நான் ஒரு காசும் இல்லாமல் வைத்தியம் பார்க்கின்றேன் என்று சொல்லுவாள்.

பிறர் கஷ்டம் எதையும் அவள் தாங்கிக்கொள்ள மாட்டாள். தனது இரண்டாவது குழந்தையைப் பிரசவிக்கும் கடைசி நிமிசம் வரையிலும்கூட ராஜனி ஏழைகளுடனும், நோயாளிகளுடனுமே வாழ்ந்தாள்" என்கிறார் ராஜசிங்கம்.

இங்கிலாந்தில் தனது மூன்றுமாதகால ஆராய்ச்சியைச் சடுதியாக முடித்துக்கொண்டு தனது மருத்துவ மாணவர்களுக்குப் பரீட்சைத் தேர்வுகளில் உதவுமுகமாக தான் கொலை செய்யப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்புதான் ராஜனி யாழ் திரும்பினார்.

"எரிகின்ற இந்த தேசத்திலிருந்து புத்தியுள்ள ஒவ்வொரு

வரும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இங்கு வைத்தியசாலைகளில் டாக்டர்கள் இல்லை. பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள் இல்லை. யுத்தத்தில் நொறுங்கிச் சிதையுண்ட கட்டிடங்களைத் திருப்பிக்கட்ட வழியில்லை. எஞ்சினியர்கள் இல்லை. மேசன்மார்களைக் காணோம். ஊழியர்கள் கூட இல்லை. குடும்பங்களைத் தாய்மார்தான் கொண்டு நடத்துகிறார்கள். அழுது புலம்புவதற்குக்கூட குடும்பத்தில் யாருமில்லாமல் இறந்தவர்களைப் புதைப்பதற்கு ஆண்பிள்ளைகளும் இல்லாமல் வயதானவர்களும், நோயுற்றவர்களும்; அலுத்துக் களைத்தோருமாய் சனங்கள் நாளும் செத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று ராஜனி ஒரு சந்தர்ப்பத்தில் எழுதினார்.

பல்கலைக்கழக மருத்துவ பீடத்துறையை இந்திய இராணுவம் ஆக்கிரமித்துக்கொண்டு அங்கு தங்கியிருந்தபோது ராஜனி தனி ஆளாக நின்று பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்க அரும்பாடுபட்டார். அல்லது பல்கலைக்கழகம் திறக்க 2 வருடங்கள் ஆவது எடுத்திருக்கும்.

குண்டு வீச்சால் சிதைந்து போயிருந்த கட்டிடங்களைச்சீர்படுத்த ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோதும் கூட பல்கலைக்கழகத்தில் நின்று வேலை பார்த்திருக்கிறார்.

"எங்களது எதிர்காலத்தை நாங்களே நிர்ணயிக்கும் மனவுறுதியை நாங்கள் காட்டியாகவேண்டும்" என்ற ராஜனியின் மனத்திடம் அவரது சகவிரிவுரையாளர்களையும் இறுதியில் இவருடன் சேர்ந்துழைக்கத் தூண்டியது.

இலண்டனிலிருந்து திரும்பிய கையோடு பல்கலைக்கழக உபவேந்தருக்கு ராஜனி எழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்:

"எனது சொந்தமக்களை விட்டு எனக்கு வாழ்க்கை என்று வேறு ஒன்று இல்லை. அதனால்தான் நான் இங்கு வந்திருக்கின்றேன்"

நசுக்கப்பட்ட தமிழ் மக்களின் குரலாக இல்லாவிட்டாலும், தமிழினப் படுகொலைக்கு எதிராக வெற்றிகரமான போராட்டத்தைக்கொண்டு நடத்துவதில் புலிகள்தான் பெரும் நம்பிக்கையாக அமைந்தார்கள். இந்திய-இலங்கை இராணுவங்கள் எந்தளவுக்குக் காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டனவோ அந்தளவுக்கு வட-கிழக்கில் புலிகளுக்கும் ஆதரவு வளர்ந்தது. இலங்கை, இந்திய இராணுவம் நடத்திய குரூரக் கொலைகளை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துவதில் ராஜனி கடுமையாக உழைத்தார்.

வாளால் வெட்டி கை, கால்கள் துண்டிக்கப்பட்ட நிலைக்குள்ளான இளைஞர்கள்-கவசவண்டிகளின் சக்கரங்களில் நசுங்குண்ட மனிதத் தலைகள்-அசிற்றுக்குள் அமிழ்த்தப்பட்ட உடல்கள் -

www.tamilarangam.net

பாலியல் வன்முறைகள்- கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டோர் -மரங்களிலும், மின் கம்பங்களிலும் தொங்கும் உடல்கள்-சாலையோரங்களில் டயரில் கொளுத்தப்பட்டுக் கருகி எரியும், துப்-பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட சடலங்கள்- அனைத்தையும் ராஜனி அம்பலப்படுத்தினார்

புலிகளும் இதே அட்டூழியங்களைச் செய்தபோதும், புலிகள் இளைஞர்களை இராணுவமயப்படுத்திக்கொண்டு போன - போக்கினையும் வெளிக்கொணர்வதில் ராஜனி முன்நின்றார்.

விடுதலைப் புலிகளைச்சேர்ந்த பெரும்பாலான இளைஞர்கள் இலட்சியக் கனவுகளில் இறந்து போயிருந்தனர். பலர் அதிருப்தியுற்று நாட்டைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தனர்.

(மிகுதி அடுத்த கலத்தில்)

## ஐரோப்பிய அழகுகள்

சேற்றில் எறிந்தபோது
தவறிச் சீமெந்தில்
வீழ்ந்துவிட்டேன்...!

இந்த இளம் நாற்றின்
இலைகள் பழுப்படைந்துவிட்டன !

அணிந்துள்ளது
பச்சைக் கண்ணாடியா?
அப்படியெனில்
அது
உங்களுக்குத் தெரியாது.

கண்ணாடிக் குற்றிக்குள்
காற்றுக் குமிழ்கள்
என்னைத் தம் உறவென்றன.

நாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

தூண்டிலில் தற்போது வெளிவரும் 'தேசத்தின் குறிப்புகள்' பகுதி மிகவும் கவனத்திற்குரிய பகுதியாகவும், நமது தேசத்தில் என்ன நடைபெறுகின்றதென்ற உண்மைகளை ஓரளவேனும் அறியக்கூடிய பகுதியாகவும் இருப்பது மட்டுமல்ல, எமது விடியலைப் பற்றிய தேடலில் படிப்பினைகளைப் பகிர்ந்துகொள்ளும் பகுதியாகவுமுள்ளது.

கலம் 30இல், பின்னட்டைக் கவிதையில் '.. நான் பிறந்தபோது என் மண்ணில் ஆயுதங்கள் இருக்கவில்லை..' எனும் வரிகள் இன்றைய புறநிலையால் வலிந்து புனையும் வரிகளாயுள்ளன.

மானிட சமூகம் வர்க்க ரீதியாகப் பிளவுபட்டு சுரண்டும் வர்க்கமாகவும், சுரண்டப்படும் வர்க்கமாகவும் வர்க்கநிலையுருவாக்கம் பெற்ற பொருளாதார அமைப்பில், உடமை வர்க்கத்தினது நலன்களைப்பேண ஆயுதங்கள் எந்த மண்ணிலுமுண்டு.

இப்போது இது இலங்கையில் மொழியினடிப்படையில் — கோடு கிழிக்கப்பட்டு உடைமைகளைக் காக்க உடைமை வர்க்கம் எத்தனிப்பதால் மலிந்து பரந்து கிடக்கிறது.

கவிதையினை இன்றைய சூழ்நிலையோடு பொருத்திப்பார்க்கும்போது சரியாகப் பட்டாலும், அது கூறும் விடயம் சரியாகப்படவில்லை. ஒருவேளை அதையெழுதியவர் ஆயுதங்களற்ற பூர்வீகக் கூட்டு சமூக அமைப்பில் பிறந்தவரோ என்னவோ!

கவிதையில் அடுத்து வரும் வரிகள் ஈழமைந்தர்களின் அராஜகப் பண்பைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பச்சிளம் பாலகர்களை ஆயுதங்களைக் கொடுத்து பொம்மைக் கூத்தில் பொம்மை ஆட்டுவது போன்று ஆட்டும் சுயநல ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளையும், அவர்களின் எடுபிடிகளையும் இக்கவிதை தோலுரித்து சாடி நிற்கின்றதாயினும் ஆரம்ப வரிகள் முரணாகப்படுகிறது. ஏனெனில் இக்கவிதையை எழுதியவர்

www.tamilarangam.net

பிறக்கும் முன்பே ஆயுதம் எமது மண்ணில் குடியிருக்கிறது. மனிதவுயிர்களைப் பறிக்கும் ஆயுதங்கள் யார் கையில் இருந்தாலென்ன?

ப. வி. ஸ்ரீரங்கன்

கலம் 28இல் 'செய்திக் குறிப்பு' பகுதி இடம்பெறாமல் விட்டதன் காரணம் என்ன? தொடர்ந்தும் அப் பகுதி இடம்பெறுதல் நன்று. காரணம் இலங்கையில் நடக்கும் பல சம்பவங்கள் வெளி உலகிற்கு இப்போது தெரியவருவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது. இலங்கையை அமைதி நிறைந்த பிரதேசமாக 'கட்டுப்பாட்டாளர்கள்' தங்கள் பிரச்சார சாதனங்கள் மூலமாகக் காட்டுகிறார்கள். அமைதியில் உள்ளடங்கும் குமுறல்கள், குளறுபடிகள் வெளியில் தெரியவருவது இந்தப் பகுதி மூலமாகவே. எனவே தொடர்ந்து அப் பகுதியையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

செ. பாஸ்கரன்

வழக்கமாக ஏற்படும் பக்கங்கள் போதாமைதான் கலம் 28இல் செய்திக் குறிப்பு இடம்பெறாமைக்குக் காரணம். இனிமேல் தவிர்க்காதிருக்கிறோம்.

— கடலோடிகள்

தூண்டிலில் வட பகுதியில் நடந்த சம்பவங்கள் மட்டுமே கதைகள், கட்டுரைகளாகப் பிரசுரமாகின்றன. பயங்கரவாதம் என்பது தமிழர் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் பரந்து நடக்கும் ஒரு விடயம். எனவே எல்லாப் பிரதேசங்களையும் கதைகள், கட்டுரைகளுக்குள் உள்ளடக்கி வெளியிட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

கே. விமல்

நாம் பிரதேச வேறுபாடு கொண்டவர்களில் லை. எனினும் அப்படியான ஒரு பார்வையைக் கடந்த கலங்கள் உங்களுக்குத் தந்திருக்குமாயின் அதில் எமது தவறும் உண்டு. நீங்கள் குறிப்பிடும் பிரதேசங்களிலிருந்து அல்லது அவற்றை உள்ளடக்கிய ஆக்கங்கள் கிடைக்காமை தான் இப்படியான ஒரு பார்வை ஏற்படுவதற்கான காரணமாகும்.

—கடலோடிகள்

தூண்டில் தாங்கி வரும் விடயங்கள் நம்பிக்கையூட்டுவன— வாக அமைந்துள்ளன. குறிப்பாக உங்களுக்கிருக்கும் வெளியீட்டுச் சுதந்திரம் "பொறாமைப்"படத் தக்கதே.

இங்கு நிலைமைகள் வெகு வேகமாக மாற்றமடைந்து வருகின்றன. பலரின் வாழ்வு அச்சுறுத்தல்களால் நிரம்பியதாய் ஆகிவிட்டது. அச்சுறுத்தல்கள் ' நாளொரு மேனியும்..' என வள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ர்கிறது. நண்பர்கள் ஒன்ருகச் ச ந்தித்து ஒரு ரீ குடிப்பதற்குக் கூட அச்சமாகவிருக்கின்றது. இது தான் நிலைமை.

இவ்வாருவது தப்பித்துவா ழலாம் என்ற ஒரு ஆசைதான். ஆயினும் திட்டமிட்டு வளர்ந்தும் தம்மை ஸ்திரப்படுத்தவும் முனை கின்ற புதிய எஜமானர்களால் பலரை அழித்துவிடாமல், அரசி யல் உணர்வுள்ளவர்களை அழித்து விடாமல் அவர்களது 'அரசியலை நடத்த முடியுமா?

கேலிச் சித்திரங்கள் திற மையான முயற்சிதான்.

'ஒரு திறந்த 1990 ' என்ற கரனின் முயற்சி புதிய த கவல்களைத் தந்துள்ளது. சோச லிஸ முகாம்களாகக் 'கருதப்' பட்ட நாடுகளின் அண்மைக்கால ப்போக்குகள் இங்கு பலருக்குப் 'புதிய உற்சாகத்தைக்' கொ டுத்துள்ளது. துடித்தெழுந்து மாக் ஸிஸத்தை இனி மியூஸியத்தில்தான் பார்க்கவேண்டும் எனவும் பிரக டனம் செய்தார்கள்.

உங்களுக்கு மேற்குறித்த நிலைதொடர்பாக கூடுதலான தகவல்கள் கிடைக்கப்பெறும் எ னநினைக்கின்றேன். அவற்றை வெ ளியிட, ஆரோக்கியமான ஆய்வுக் கு வழிவகுக்க நீங்கள் முன்வர வேண்டும்.

இருக்கக்கூடிய வெளியீட்டு சுதந்திரத்தின் மூலம் நமது கட ந்த, நிகழ் காலங்களை உண் மையான சாராம்சத்துடன் முன் வைப்பதுடன், நமது தேசத்தின் எதிர்காலத்திற்கான புதிய பா தை குறித்த விவாதங்களை ஆர ம்பிக்க வேண்டும்.

இலங்கை .....

7ஆவது இலக்கியச் சந்தி ப்புப் பற்றிய கண்ணேட்டத்தில் 'தூண்டில் உட்படப் பலர் தம க்கு எழுத்து மட்டும்தான் சரி என்பதுபோல மௌன விரதம் தான்' என்ெருரு வசனம். ஆக நீங்களும் இறுதியில் வேஷம் தா ன் புனைகிறீர்களா?என்று ஐயத் துடன் அச்சமும் தோன்றுகிறது. இதுவரை போட்ட வேஷங்களு ம் நடித்த நாடகங்களும் போ தாதா?நாமும், மக்களும் இது வரைபட்ட வேதனைகளும், ஏமா ற்றங்களும் போதும். இனியாவது துன்பங்களற்று வாழவேண்டும் .

மாற்றம் வேண்டும், மாற் றம் வேண்டும் என்று மாரித்தவ ளைகள் போல் கத்திவிட்டு உயி ரை விடுவதில் அர்த்தமில்லை . பேச்சோடும், எழுத்தோடும் — தூங்கிவிடாது செயலில் இறங் குவோம்.

'தடைகள் தகர்க்கப்படு கின்றன' மகளிரின் விழிப்புணர்ச் சிக்கு எடுத்துக்காட்டாய் இருந் தது. போலிக் கௌரவங்களுக்— காகவும், சுயலாபங்களுக்காகவும் நமக்கு சம்பிரதாயங்கள், கண்டி ப்புகள், கட்டுப்பாடுகள் என்ற

(தொடர்ச்சி 14 ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்களமும், புலியும் !

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான 'தேனிலவு' பலராலும் எதிர்வு கூறப்பட்டதைப்போல 'முறிந்து' மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன. புலிகளும், அரசும் என்ன பேசிக் கொண்டன என்று யாருக்கும் தெரியாததால், இப்போதைய மோதல்களுக்கான காரணங்களும் அவர்களுக்கே வெளிச்சம்.

அரசியல் சுயலாபங்களுக்காக நடத்தப்படும் இப்படியான பேச்சுவார்த்தைகளிலும், மோதல்களிலும் உயிரிழப்பது — இவை பற்றிய எதையுமே தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பமேயில்லாத பொதுமக்கள்தான் என்பதில் இன்றுவரையான வரலாற்றில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

இலட்சக்கணக்கானவர்கள் அகதிகளாக்கப்பட்டும், ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டும், எண்ணிக்கை தெரியாதவர்கள் கைது செய்யப்பட்டும் தொடர்ந்து கொண்டிருக்கும் தற்போதைய மோதல்கள் புதிய வடிவில் நடந்துகொண்டிருக்கின்றன.

இதுநாள்வரை சிறுபான்மையினரின் எதிரியாக இருந்த இலங்கையரசு புலிகளின் 13 மாதகால சேவைகளினால் சிறுபான்மையினரின் நம்பிக்கைக்குரியதாக்கப்பட்டு, நண்பராக்கப்பட்டு, பயங்கரவாதத்திலிருந்து மக்களைக் காப்பாற்றும் புரட்சிகர சக்தியாக 'தோற்றம்' பெற்றுள்ளது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இதற்கான பலமான அத்திவாரம் இலங்கையரசினால் புலிகளின் ஒத்துழைப்புடன் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டது.

தேசத்தைப் பாதுகாக்கும் யுத்தமென்ற போர்வையில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் புதிதாக இராணுவத்தில் — சேர்க்கப்பட்டுக் கொண்டிருப்பதும், தேச பாதுகாப்பு நிதி என்று நடிகர்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் இலட்சக்கணக்கில் ஆயுதப் படைகளுக்குப் பணம் சேகரித்துக் கொடுத்துக் கொண்டிருப்பதும், தென்னிலங்கையில் உள்ள தமிழர்கள் ஆயுதப்படைகளினால் கடத்தப்பட்டு, இரகசியமான முறையில் கொலை செய்யப்பட்டுவருவதும், தமிழ்,

www.tamilarangam.net

சிங்கள எல்லைப்புறக் கிராமங்களில் உள்ள சிங்களக் கிராமவாசிக ளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு வருவதும்..... மீண்டும் சிறு பான்மையினருக்கு எதிராகப் பெரும்பான்மையினரைத் தூண்டிவிடும் இனவாதம் என்ற ஆயுதத்தை இலங்கையரசு புதிய முறையில் கூர்மை யாக்கி வருவதைக் காட்டி எச்சரிக்கின்றன.

ஆனால் இந்த எச்சரிக்கைகள் "இது மக்களுக்கு எதிரான யுத்தம் அல்ல, புலிகளுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தமே" என அரசினதும், அரச ஆதரவாளர்களினதும் கோசங்களால் மறைக் கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் நடைபெறும் மோதல்களைப் பயன் படுத்தி இலங்கையரசு மலையகத்திலும் தனது கொலைக்கரங்களை நீட்டியுள்ளது. மலையகத் தொழிலாளர்கள் இரவோடிரவாகக் கடத் தப்பட்டு, கொலை செய்யப்பட்டு தெருக்களில் வீசப்படுகிறார்கள். அவர்களின் லயன்களும், உடைமைகளும் தீக்கிரையாக்கப்படுகின்றன. இலங்கையரசு எதிர்பார்த்ததைப் போலவே வடக்கு, கிழக்கு நிலை மைகளின் 'முக்கியத்துவத்தினால்' மலையக நிகழ்வுகள் அமுங்கிப்போ ய்விட்டன.

அரசின் தற்போதைய இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகளும், ஏனைய இனவாதக்கட்சிகளும் கூட்டாக ஒத்துழைப் பு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

மறுபுறத்தில் ஜனநாயக, முற்போக்கு, மனிதாபிமான சக் திகளைக் கொன்றொழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் பு லிகள் வழமைபோல் இப்போதும் சிறுவர்கள் உட்பட மக்களையே தங்களுக்குக் கேடயமாக்கியுள்ளார்கள்.

ஈரோஸ் இப்போது முழுக்க முழுக்க புலிகளின் குரலா க ஜனாதிபதியிடம் தமக்கு நம்பிக்கையிருப்பதாகவும், புலிகளுடன் அர சு திரும்பவும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

முன்பு இந்திய அரசின் துணையுடன், இந்திய இராணுவத் தின் அழிப்புகளுக்கு துணைபோய், ஏராளமான அட்டூழியங்களைப் புரி ந்து மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்ட ஈ.பி.ஆர்.எல். எவ், டெலோ, ஈ.என்.டி.எல்.எவ் குழுவினர் புதிய இந்திய அரசு தங்களைக் 'கைவிட்டபின்', இப்போது "பாஸிஸ புலிகளை ஒழிக்கும் இலங்கையரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு நிபந்தனையற்ற ஆத ரவு வழங்குவோம்" என்று கூறிக்கொண்டு இலங்கையரசுடன் ஒட்டிக் கொண்டுள்ளார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதே இலங்கை அரசின் படைகளை, முன்பு தாம் பலாத்காரமாகப் பிடித்து அமைத்த - பின்னர் இந்தியாவுக்குத் தாம் தப்பியோடியபோது நிராதரவாக புலிகளிடம் சிக்க வைத்துவிட்டுப் போன - ரி.என்.ஏ. மூலம் தாக்கியதையும், அப்போது இலங்கை அரசும், புலிகளும் சேர்ந்து திருப்பித் தாக்கியதையும், இதே இலங்கையரசின் உதவியுடன்தான் தங்கள் உறுப்பினர்களை புலிகள் தென்னிலங்கையில் வைத்துப் படுகொலை செய்தார்கள் என்பதையெல்லாம் 'விட்டுத் தள்ளிவிட்டு! இப்போது இவர்கள் இலங்கை அரசுடன் கைகோர்த்துள்ளார்கள்.

ஈவிரக்கமற்ற அழித்தொழிப்புகளினூடாக ஒரு அடக்குமுறைச் சமுதாயத்தினை உருவாக்கி, அதனை ஆளுவதே இலங்கையரசினதும், புலிகளினதும் நோக்கமாகும். இம் மோதல்கள் கூட இந்த அதிகாரத்தைத் தங்களுக்கு எடுத்துக் கொள்வதற்கேயாகும். இந்த நோக்கங்களையே வெவ்வேறு வடிவங்களில் கொண்டிருக்கும் சிங்கள இனவாதக் கட்சிகளும், இயக்கங்களும் தங்கள் 'கொள்கை'களை ஒத்த தரப்புகளுடன் கூட்டுச் சேர்ந்து இரத்தக்களரியைக் கிளறிவிடுகின்றன.

இந்தக் கும்பல்களை இனம்கண்டு நிராகரித்து, இவர்களின் அதிகாரப் போட்டிகளுக்காகக் கொல்லப்பட்டும், அகதிகளாக்கப்பட்டும், அழிவுகளையும், இழப்புகளையும் நேருக்குநேர் முகம் கொடுத்துக்கொண்டிருக்கும் இலங்கை மக்கள் சார்பாக, அவர்களுக்கு ஆதரவளிப்பதாக இயங்க வேண்டியதே மனிதநேயம் உள்ள அனைவரும் செய்யவேண்டியதாகும்.

( 11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலங்குகள். இவைகளை உடைக்கும்வரை விமோசனம் இல்லை என்பதைப் புரிந்துகொண்டால் நல்லது.

நிவேதிகாவின் கவிதையில் 'எமது எச்சங்கள் சுரண்டலற்ற சுதந்திர சமூகம் படைக்கும்' என்ற நம்பிக்கைகளை வளர்த்துச் செயற்படுவோம்.

வே.உதயா

ந.பானு

**யாரையும், எதையும் சந்தேகப்படவேண்டும் - நம்பிக்கையீனத்திற்கு வழிவகுக்காமல் !**

**-கடலோடிகள்**

www.tamilarangam.net

# அழகு

ஏகாந்தம்.
வெறுமையான நீலவானத்தில்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
வெண்பஞ்சுத் தீவுகள்.

அடிவானத்தில்,
தூரிகை பிடிக்கத் தெரியாத
ஓவியன்
வீசியெறிந்த நிறக் கலவைகள்.

உஷ்ணம் குறைந்துவரும்
சூரியக் கதிர்கள்.

அலை எழும்பி வீழ்ந்து
பாறையில் சிதறித் தூவும்
வெண் நுரைகள்.

உயிரினங்களைச் சுகம்
விசாரிக்கும் காற்று..
தொலை தூரத்திலொருவன்
கடலுக்குள் நீண்ட பாறையில்
தூண்டில் போட்டு
தலை கவிழ்ந்து
நீருக்குள் ஊடுருவும் விழிகளுடனும்,
இழுவை உணர்வை எதிர்பார்த்து
நுணுகி நிற்கும் மூளையுடனும்,
நாளைய
உணவிற்காய் காத்திருக்க...

இந்த இயற்கையை
அவன் என்று ரசிப்பான்
வயிறு நிறைந்து... ?

இரா. சத்தியன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

(கலம் 30இன் தொடர்ச்சி)

கிழவிக்கு 89வயது. குடுகுடு போட்டுத்தான் நடப்பவள் கோழிக்குஞ்சு வளர்ப்பினுள்தான் கிழவி தனது உயிரை அடைக்கலம் கொடுத்து வைத்துள்ளாள் அவள் வளர்க்கும் கோழிக்குஞ்சுகளிலொன்றை இலக்கியமாக்கினுல்.... அதாவது கொலை செய்தால்... அதாவது இலக்கியமாக்கினுல்...

கிழவி நேசத்துடனும் பாசத்துடனும் வளர்க்கும் கோழிக்குஞ்சொன்றைக் கொலை செய்தால்.. அதிர்ச்சி தாங்காமல் கிழவி செத்துவிடுவாள். இந்த ஐடியாவினுள் திகிலும், பத்திரிகைத்துவமும் உண்டு.

இலக்கிய விமர்சகர்கள் கூட இது எதிர்காலத்திற்கும் எந்தக் காலத்திற்கும் பொதுவான சமகால இலக்கியமாகவிருக்கும் என்று தங்கள் நரம்பில்லாத நாக்கால் மொழி பொழிந்து என்மீது இரக்கம் - காட்டுவார்கள்..

கிழவியின் உயிர் - கோழிக்குஞ்சின் உயிர். அந்த உயிர்தான் எனக்கு இப்போது தேவை. நான் யமன். யமன் - இலக்கியவாதி. கிழவியைக் கொன்ருல் கோழிக்குஞ்சு சாகாது. கோழிக் குஞ்சைக் கொன்ருல் கிழவி சாகும்

சரி, இனிக் கொலையைச் செய்ய வேண்டியதுதான்.

எடுத்த முடிவில் எனக்குத் திருப்தியென்ட திருப்தி. இலக்கியவாதியாக வரத் துடித்துக்கொண்டிருந்த பத்திரிகையாளனுகவிருந்தபோதும் நான் ஒரு தமிழன் கல்லும் தோன்ருத, மண்ணும் தோன்ருத, வானம் புணர்ந்த போது தோன்றிய உலகின் முதலாவது இனத்தின் இன்றைய வாரிசுகளில் ஒன்ருக நானும் இருக்

சிறுகதை

# கொலை



www.tamilarangam.net

கின்றேன் என்ற பிரக்ஞை திடீரென்று ஏற்பட்டதால் எனக்கு கோழிக் குஞ்சில் இனம்புரியாததொரு இரக்கம் வந்தது.

இதனால் எனது ஐடியாவில் ஒரு சிறிய மாற்றத்தை ஏற்படுத்த என்னை நான் நிர்ப்பந்தித்தேன்.

யுவர் அற்றேன்சன் பிளீஸ் கதை இதுதான். உங்களது குசினிகளுள் மண்ணெண்ணெயோ, தேங்காயெண்ணெயோ இருந்தால் இதை வாசிக்குமுன் உங்கள் விழிகளை ஒருதடவை குளிப்பாட்டிக் கொள்ளுங்கள். நல்ல வாசகருக்குரிய நற்குணங்களில் இதுவும் ஒன்று.

## ஜெயந்தீஸன்

கிழவியை நான் கொல்ல போகின்றேன். அவளை நான் கொல்லலாம். இதில் எந்தப் பிரச்சினையுமில்லை.

வேட்டிகளையும், சால்வைகளையும் கழட்டியெறிந்துவிட்டு, யூனிபோம் போட்டு சயனைட் குப்பிகளைத் தங்கள் கழுத்துகளில் தொங்கவிட்ட அல்லது தொங்கவிடாத இயக்ககாறர்: இல்லை போய்ஸ்கள் என்றால் 'மொட்'டாகவிருக்கும், கிழவிகளைக் கொல்வது கெரில்லா இலக்கியங்களில் தடுக்கப்பட்ட ஒன்றாகவில்லை என்ற கருத்தில் என்னுடன் ஒத்துப் போவார்கள். அப்படித் தடுக்கப்பட்டிருந்தாலும், தடுக்கப்படக் கூடியதல்ல என்பதை நிருபிக்க அவர்கள் புதிய கெரில்லா உபதேஷம் எழுதுவார்கள்.

இயக்கங்கள் கிழவியைக் கொன்றால் அவளிற்கு துரோகிப் பட்டம் கிடைக்கும். அவர்களைப் பயன்படுத்தித்தான் நான் கிழவியைக் கொல்லப் போகின்றேன்

ஆனால் அவள் தியாகியாக வேண்டும். போய்ஸ்களை மட்டும் தான் தியாகிகளாக்கலாம் என்று ஜீ.ஜீ. பொன்னம்பலமண்ணை விழுந்து விழுந்து படிச்ச சட்டப் புத்தகங்களில்கூட எழுதியில்லை. இதனால்தான் கிழவியைத் தியாகியாக்கும் துணிச்சல் எனக்கு வந்தது.

இதோ கதை. மன்னிக்கவும். நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் ஒரு காலத்தில் கே.எஸ். ராஜாவின் விசிறியாகவிருந்தேன் என்பதுதான். எல்லாம் பழக்கதோஷம்.

இயக்கம். கிழவியின் பேரனைத் தேடி கிழவியின் வீட்டிற்குள் நுழைகிறது. அவளின் பேரனும் இயக்கம்தான். வேறொரு இயக்கம். இவையொன்றும் அவளிற்குத் தெரியாது.

இது எப்படி எனக்குத்தெரியுமென்று நீங்கள் கேட்பீர்களானால் உங்களுக்கு இலக்கிய ரசனையில்லையென்றுதான் அர்த்தம். நான் இலக்கியவாதி. எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் மூடிக் கட்டிக்கொண்டு போனவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ம் உங்களது நிர்வாணத்தை என்னில் பார்க்க முடியும். நான் இலக்கியவாதி. நான் கடவுள். நீங்கள் என்னை இலக்கியவாதியாகவும், கடவுளாகவும் அங்கீகரிக்க வேண்டும்.

ஷ்.. முணுமுணுப்புகள் கூட மறைந்துவிட்டன. என்னை நீங்கள் இலக்கியவாதியாக அங்கீகரித்துவிட்டீர்கள்.

89 வயதுக் கிழவியை அவர்கள் இப்படித்தான் குழக்கு விசாரணை செய்யப் போகிறார்கள்.

"எங்கையடிஉன்ரை பேரன்?"

வாசகர்களே, உங்களது தலையைப்போட்டு உடைக்க வேண்டாம். முதியோர்க்கு அவர்கள் வரவேற்புக் கொடுப்பது

இப்படித்தான். இது அவர்களது பழக்கதோஷம் மட்டுமல்ல, தந்திரோபாயமும் கூட.

"எவன்?"

"நீயென்ன செவிடாடி? உன்ரை பேரன்தான்"

"எனக்குத் தெரியாது"

"உந்த வேசைக்கு (3. அடிக் குறிப்பை மறக்காமல் படிக்கவும்.) எல்லாம் தெரியும். உவள் நடிக்கிருள். வையுங்கோ வெடியை"

"ஓம் கப்ரின்"

டுமீல்.. டுமீல்..டுமீல்.

கிழவி இரத்த வெள்ளத்தில் மிதந்தாள். அவள் செத்தாள் என்பதுதான் எனக்கு முக்கியம்.

செத்தாள்..

செத்தாள்..

செத்தாள்..

மூச்சு துண்டாக வரலில்லை என்பதைப் பரிசோதித்துவிட்டுத்தான் இயக்கம் போயிற்று.

பாவம் கிழவி. பேரன் இயக்கம். பேரனிற்காகத் தன்னை தியாகம் செய்தாள் என்று அவளது மரணத்தை நான் மொழிபெயர்க்கின்றேன். தான் இயக்கமென்று தெரியாமல் செத்தாள் எனவே அவள் தியாகி.

தியாகி..

தியாகி..

தியாகி..

நான் எனது சீட்டுக் கிழிபடாமலிருக்க வேண்டுமென்பதற்காக ஒரு கொலையைச் செய்துவிட்டேன். இல்லை, ஒரு இலக்கியக் கொலையைச் செய்து விட்டேன். இல்லை, இல்லை நான் இலக்கியம் படைத்துவிட்டேன்.

ஆசிரியர் கதையை வாசித்துவிட்டு, எனக்கு இப்போது எத்தனை வயது என்று கேட்டார்.

"30" என்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த ஒரேஒரு சிறுகதைக்காக நான் கிழவனாகும்போது எனக்கு மணிவிழா எடுக்கப்படும் என்றார்.

எனக்குப் பேய்ச் சந்தோசம். மணிவிழா நாயகர்கள் ஆன நந்தியும், டொமினிக் ஜீவா அண்ணையும் போகும் சுவர்க்கமே எனது சுவர்க்கமாகவுமிருக்குமென்பதால்தான்.

அடிக்குறிப்புகளுக்கான விளக்கங்கள்:

1) நித்திரைக் குளிசை சாவுக்கு உத்தரவாதம் தராதென்று நான் அடித்துச் சொல்வதற்குக் காரணம் நடேசுதான். அவன் எட்டுத் தடவைகள் அதை கொண்டு ட்ரை பண்ணிவிட்டான். தலையைப் போடமுடியவில்லை. இருந்தும் அவைகளைக் கொண்டுகூட எம்மால் சாகமுடியும் என்பதை நிருபிக்க அவன் தொடர்ந்து போராடிக்கொண்டுள்ளான்.

2) ஆங்கிள் என்பது இங்கு மாமா என்ற அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. ஆங்கிள் - கோணம்.

3) இயக்கங்களது கோட்பாட்டில் 89 வயதுக் கிழவியும் வேசையாகக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.



"அமைச்சரே எனது ஆட்சியின் அட்டூழியங்களை எதிர்த்துக் கலகம் செய்தவரை எமது வீரர்கள் கொன்றுவிட்டனர். இதனால் மக்கள் கொதித்தெழுந்துள்ளனர். இப்போது என்ன செய்வது?"

"கவலை வேண்டாம் மன்னவா. எதற்கும் முதலில் இக் கொலையை உரிமை கோராமலே விட்டுவிடுவோம். இனந் தெரியாத நபரால் கொலைசெய்யப்பட்டுவிட்டதாக மக்கள் பேசிக் கொள்வார்கள். அப்படியில்லாமல் உண்மையைக் கண்டு பிடித்தால் சமூக விரோதி என்று தண்டித்தோம் என வழக்கம் போலக் கூறிவிடலாம்"

- சின்னன்ன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பலூன்கள்

என் உறவினர்கள்
என் நண்பர்கள்
என்னுடன் படித்தவர்கள்
எனக்குத் தெரிந்தவர்கள்
அநேகம் பேர்
கோரக் கொலைகளில் நாக்கறுந்தனர்.

நான் மட்டும்
என்னை வளர்த்துக் கொண்டேன்.

விமர்சனம் வலித்தபோது
வேட்டுக்கள் தந்த வேங்கைப்
பூட்டுக்குள் எனது நண்பன்....

நாளை கொல்லப்படவும் கூடும்.

நான் மட்டும்
என்னை வளர்த்துக் கொண்டேன்
ஒரு பன்றியைப் போல !

காயன்

# செய்திக் குறிப்பு

01.06.90 வீரகேசரி

புலிகளுடன் போரிட நாம் முட்டாள்கள் அல்ல. பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதே எமது நோக்கம். புலிகளுக்கெதிராக ஈ.பி.ஆர்.எல்.லைப் பயன்படுத்தமாட்டோம் — மந்திரிசபைப் பேச்சாளர்

மாகாணசபை ஒன்றை அவசியமான — போது கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கக்கூடிய விதத்தில் அரசியலமைப்புத் திருத்தச்சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும்.

இன்றுகூட எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று கூறமுடியாது. இன்று தமிழ் மக்கள் மாத்திரமல்ல, சிங்களவர்கள்கூட இந்நாட்டைவிட்டு வெளியேற ஆரம்பித்துள்ளனர். பயம், பீதியே இதற்குக் காரணம் — சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அங்கத்தவர்

01.06.90 டெய்லிநியூஸ்

வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அநீதியான கைதுகளையும், மரண தண்டனைகளையும் உடனடியாக நிறுத்தும்படி புலிகளை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது. புலிகளால் சிறை வைக்கப்பட்டவர்களைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்கத்தை அனுமதிக்கும்படியும் இச்சபை கேட்டுள்ளது.

01.06.90 சன்

அரச சிறைகளில் 7267பேர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

1988 நவம்பரில் மாலைதீவில் நடைபெற்ற சதியில் பங்குபற்றி சிறையிலடைக்கப்பட்டிருக்கும் இலங்கையர்களை பெற்றுக்கொள்ளுமாறு மாலைதீவு அரசு இலங்கையரசைக் கேட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் இலங்கைப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பிரேசன் பிரவோ தாக்குதலில் ஜே.வி.பியைச் சேர்ந்த 15பேர் கொல்லப்பட்டனர்.

களனிய பொலிஸ்காரர்களால் பெண் ஒருவர் கொலைசெய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது.

02.02.90 ஐலண்ட்

பத்திரிகையாளர்களை நான் சிறையிலடைப்பேன். நீங்கள் வெலிக்கடைக்குப் போகவிரும்புகிறீர்களா? அமைச்சர்களை நீங்கள் கோபப்படுத்தக்கூடாது. அப்படிச் செய்தால் உங்களை நான் கைது செய்வேன் — பத்திரிகையாளர் மகாநாட்டில் இராஜாங்க அமைச்சர்

புலிகள் தமது அரசியல் எதிரிகளை கடத்தியும், கொலைசெய்தும் வருவதை, சர்வதேச மன்னிப்புச்சபை கண்டித்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்குள் புகுந்திருக்கும் பொலிசாரை வாபஸ் பெறும் படி இலங்கை மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

02.06.90 வீரகேசரி

ரி-56 ரகத் துப்பாக்கிகள், லான்ட்ரோவர் வாகனங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கான டெண்டர்களை மந்திரிசபை அங்கீகரித்துள்ளது. இத்துப்பாக்கிகள் சீனாவிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடுமையான பக்தியும், அந்தசமய உணர்வும் உள்ள மலையக மக்களுக்கு சமய அறிவை ஊட்டி சமய வழிகளில் அவர்களை வழிநடத்தியும் சகலதுறைகளிலும் பின்தங்கியுள்ள இம்மக்கள் முன்னேற்றமடைய சிறந்த வாய்ப்பாக அமையும் - இராஜாங்க அமைச்சர்

03.06.90 ஐலண்ட்

சுமார் 200 முஸ்லீம்கள் கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்புக்குத் தப்பி வந்துள்ளதாகவும், 15 முஸ்லீம்கள் புலிகளால் கொல்லப்பட்டிருப்பதாகவும் மு.கா தலைவர் தெரிவித்துள்ளார்

04.06.90 டெய்லிநியூஸ்

பிரான்ஸிலிருந்து நாடுகடத்தப்பட்ட18 தமிழ் அகதிகள் கல்கத்தா விமானநிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். 1985ஆம் ஆண்டு புலிகளின் தாக்குதல்களிலிருந்து தப்ப தாங்கள் பிரான்ஸுக்குச் சென்றதாக அவர்கள் தெரிவித்தனர்.

04 06.90 வீரகேசரி

மாகாணசபையைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படு முன் ஈ.பி.ஆர்.எல்.எவ் மாகாணசபையை கலைக்க முன்வரவேண்டும் - ஈரோஸ்

பாடசாலைக்கு வந்து வரவுப் பதிவேட்டில் கையொப்பம் இட்டுவிட்டால் சம்பளம் கிடைக்குமென்று இன்றைய ஆசிரியர்கள் திடமாக நம்புகிறார்கள். இப்படியான இந்த நிலைமைக்கு ஆசிரியர்கள் மாத்திரம் காரணமென்று கூறிவிட முடியாது - கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர்

05.06.90 வீரகேசரி

யாழ் மாவட்டத்திலுள்ள காக்கைதீவுக் கிராமத்தில் கடந்தகால வன்செயல்களின்போது கடுமையாகப் பாதிக்கப்பட்ட 21 கடற்றொழிலாளர்கள் புனர்வாழ்வு, புனருத்தாரன அமைச்சுக்கு அனுப்பி வைத்த அவசரக் கடிதமொன்றில் தங்கள் பரிதாபகரமான நிலைமைகளை விளக்கி நிவாரணம் வழங்குமாறு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர். இப்பகுதியில் இலங்கை இராணுவத்தினராலும், இந்திய இராணுவத்தினராலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் தாம் தொழில் இழந்து, உடைமைகள் இழந்து பிள்ளைகளுடன் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிப்பதாக அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் மாகாணத்தில் சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றை நிறுவுமுகமாக வெலிகமையில் 540 ஏக்கர் காணியை சுவீகரிப்பதென அரசு முடிவுசெய்துள்ளது.

05.06.90 ஐலண்ட்

அரசுக்கு விரோதமாகச் செயற்பட்டார்கள் என்ற 40 இளைஞர்கள் பொலனறுவையில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்கள்.

06.06.90 வீரகேசரி

தேயிலை விற்பனையால் எமக்குக்கிடைக்கும் வெளிநாட்டுப் பணத்தின் மூலம் தான் நம்நாட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வாங்கவேண்டும் - தோட்டத் தொழில்துறை அமைச்சர்

யாருக்காக?எதற்காக?போராளிகள் போர்க்களத்தில் தங்கள் இன்னுயிரைத் துறந்தனர் என்பதை ஒவ்வொருவரும் தமக்குள்ளேயே கேட்டுக்கொள்ள வேண்டும் - புலிகளின் வலிகாமப் பொறுப்பாளர்

07.06.90 வீரகேசரி

வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைக்கவும், தேர்தல்கள் நடத்துவதற்கும் சட்டமூலமொன்றை உடனடியாகக் கொண்டுவருவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கடந்த தேர்தல்களின்போது ஆயுதமுனைச் சூழல் காரணமாக மக்களில் குறிப்பிட்ட பகுதியினர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. மக்கள் வாக்களி

www.tamilarangam.net

ப்பதற்கு அஞ்சி வீடுகளில் முடங்கிக்கிட ந்தனர் — இராஜாங்க அமைச்சர்

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலா ன உறவுகள் தொடர்ந்து வலுவடையும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

கிழக்கிலங்கையில் கடற்குளிப்புக்கு பிரபலமான, பாசிக்குடாவில் சேதமடைந்திருந்த உல்லாசப் பயணிகள் விடுதி - யொன்றை புலிகள் திருத்தியமைத்துத் தற்போது அதை நடத்திவருகின்றனர்.

இன்றைய தமிழ்நிலையில் மலையகத்தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாக்குரிமையிருப்பதால் அவர்களுக்காகப் பரிந்து பேசப் பலர் இப்போது ஓடிமுன் வருகிறார்கள். ஆனால் 1970-77 களில் அவர்கள் பட்டினியால் சாகும்போது யாரும் பரிந்துபேச முன்வரவில்லை-

இ.தொ.க. உதவிச் செயலாளர்

07.06.90 டெய்லிநியூஸ்

வெலிசறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 28 பல்கலைக்கழக மாணவர்களைச் சந்தித்த லலித் பாசைகள் படித்து நேரத்தைப் பிரயோசனமாக்கும் படி அவர்களுக்குக் கூறினர்.

07.06.90 சன்

றிச்சர் டீ சொய்சாவின் படுகொலை தொடர்பான விசாரணைகளில் தலையிட்டால் உயிராபத்து விளையும் என சொய்சாவின் தாயாருக்கும், வழக்கறிஞருக்கும் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

08.06.90 ஐலண்ட்

75,420 யு.எஸ். டொலர்கள் இலங்கை அரசால் விளம்பரங்களுக்காகச் செலவழிக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் தெரிவித்தார்.

09.06.90 வீரகேசரி

வவுனியா, மதவாச்சி வீதியிலுள்ள பூவோயா பாலத்தடியில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த லொறியொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிர- யோகத்தில் சாரதி கொல்லப்பட்டுள்ளார்.

போக்குவரத்துச்சபைச் சேவையை மக்கள் மயப்படுத்துவதை எதிர்ப்பதற்கு சு.க, கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜ கட்சி, ம.ஐ.மு ஆகியன தயாராகியுள்ளன. இ.போ.ச.வை மக்கள் மயப்படுத்துவதால் இது முற்றாக அழிந்துவிடு- வாமென்றும், இதனால் பொருளாதாரம் பாதிப்படையும், அப்போது மக்கள் புரட்சிகூட வெடிக்கலாம் எனவும் இக் கட்சிகளால் கூறப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வுதான் எமக்கு முக்கியம். போராடுவது எமது நோக் கமல்ல — புலிகளின் மட்டு, அம்பாறை மாவட்டத் தளபதி

எந்தக் குண்டுவீச்சு விமானங்களும், கெலிகளும் குண்டுவீசியும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் எம்மை அழித்தன- வோ அவைகள்தாம் எமது இயக்கத்தலைவர்களையும் இன்று கொழும்புக்கும் ஏனைய பகுதிகளுக்கும் பேச்சுவார்த்- தைக்காக ஏற்றிக்கொண்டு பறக்கின்றன — புலிகளின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்

வடக்கு, கிழக்கு றிசேர்வ் பொலிசாருக்கான நேர்முகப் பரீட்சைகள் 5 - பொலிஸ்பிரிவுகளில் ஆரம்பிக்கவுள்ளன. இப் பரீட்சைகளுக்குத் தோற்றும் சுமார்1,700 பரீட்சார்த்திகள் புலிகளின் மக்கள் முன்னணியால் வழங்கப்பட்ட பட்டியல்களில் இடம்பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நமுவல் அரசியலை இளைஞர்கள் முற்றாக நிராகரித்து தம் உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய அமைப்புகளை அறிந்து செயற்பட ஆரம்பித்துவிட்டார்கள் சமீபகால நடப்புகள், அரசியலைப் புரிந்துகொண்ட சமுதாயமாக மலையக மக்கள் மாறிவருவதைப் புலனாக்குகின்றது. —மலையக மக்கள் முன்னணி தலைவர்.

10.06.90 வீரகேசரி

வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லைக்கவும், புதிதாகத் தேர்தல் நடத்தவும் வழிவகுக்கும் திருத்தச் சட்டமும் தயாரிக்கப்பட்டுவிட்டதாக சட்டமா அதிபர் திணைக்கள உயர்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

10.06.90 சன்டே ஒப்சேவர்

அநுரா பண்டாரநாயக்கவும், வேறுசில ச.க. பாராளுமன்ற உறுப்பினர்களும் யாழ்ப்பாணம் வந்து புலிகளுடன் கலந்துரையாடவிருப்பதாக புலிகளின் பத்திரிகையான 'ஈழநாதத்தில் வந்த செய்தியை மறுத்த அநுரா " அவர்களுடன் பேச நான் ஏன் அங்கு போகவேண்டும்? அவர்கள்தான் எங்களிடம் வரவேண்டும்" என்று கூறினார்.

நுகோசெலவாக்கியாவுக்கூடாக இத்தாலி செல்ல முயற்சித்த 16 இலங்கையர்கள் நுகோசெலவாக்கியாவில் வைத்து இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்கள். இவர்களை சி.ஐ.டி விசாரணை செய்கிறது.

11.06.90 வீரகேசரி

இரண்டு வாரத்தில் அரசியல் அமைப்பின் 6ஆவது சரத்தை நீக்குதல், மாகாணசபையைக் கலைத்தல் ஆகிய எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அரசு வாக்குறுதியளித்துள்ளதில், இலங்கையரசுக்கும் எமக்குமிடையேயான முறிவு நீங்கியுள்ளது - மட்டக்களப்புமாவட்ட புலிகளின் அமைப்பாளர்.

12.06.90 வீரகேசரி

மட்டக்களப்பு மாவட்டத்தின் தலைமை பொலிஸ்நிலையத்தை முற்றுகையிட்ட புலிகள் பொலிசாரை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு, பொலிஸ் நிலையத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ்காரர் ஒருவர் இளைஞர் ஒருவரைத் தாக்கிவிட்டு, சிப்பாக்கிப் பிரயோகம் செய்து எச்சரித்திருக்கிறார் என்றும், அப்படிச் செய்தவர் யார் என இனங்காட்டிக்கொள்ள பொலிசார் யாரும் முன்வராததே புலிகளின் முற்றுகை நடவடிக்கைகளுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

கலுவாஞ்சிக்குடி, கல்முனைப் பகுதிகளில் புலிகளுக்கும், பொலிஸ், இராணுவத்திற்குமிடையில் மோதல் ஆரம்பித்துள்ளது.

புலிகள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் நிலைகொண்டிருப்பதைப் பார்க்கவும், அவர்களது நடமாட்டங்களையும், செயற்பாடுகளையும் அவதானிக்கவும் மக்கள் திரண்டு வந்தனர்.

இப்போதைய நெருக்கடியான காலகட்டத்தில்கூட போராளிகளாக வந்து சேரவேண்டியவர்கள் பாஸ்போட் எடுத்துக்கொண்டு வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர் - புலிகளின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர்.

13.06.90 வீரகேசரி

போர்நிறுத்த மீறலை 24மணி நேரத்தில் நிறுத்த அரசு-புலிகள் பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளது மட்டக்களப்பில் நடந்த சம்பவத்தின் தாத்பரியங்கள் என்ன என்பது இருசாராருக்கும் தெரியாமல் இருப்பதால், அங்கு நேரில் சென்று நடந்த விடயங்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பது என்றும் இணக்கம் காணப்பட்டது.

கல்குடா, கும்புறுமூலை, கலுவாஞ்சிக்குடி, கல்முனை ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களிலிருக்கும் இராணுவத்தினருக்கும், புலிகளுக்குமிடையில் - மோதல்கள் தொடர்ந்து நடந்தவண்ணமுள்ளன. செலி தாக்குதலில் 25 ஊர்வாசிகள் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் ஏனைய பிரதேசங்களிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் புலிகளால் கைப்பற்றப்பட்டிருக்கும் பொலிஸ் நிலையங்களை நாம் மீட்டே தீருவோம். பெருமாள் செய்த வேலையைப் பிரபாகரனும் செய்திருக்கிறார். பெருமாள் நாட்டைவிட்டு ஓடிவிட்டார். அவருக்கு ஏற்பட்ட கதியே பிரபாகரனுக்கும் ஏற்படும் - இராஜாங்க அமைச்சர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

13.06.90 டெய்லி நியூஸ்

மட்டக்களப்புக்கும், யாழ்ப்பாணத்துக்கு மான புகையிரதங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கில் இ.போ.ச போக்குவரத்துச் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை றெலோவும், புளொட்டும் கண்டித்துள்ளன.

எஸ்.ரி.எப் படையினர் மொனராகல முகாமிலிருந்து அம்பாறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கும், இலங்கைப்படைகளுக்கும் இடையிலான – மோதலில் பொதுமக்கள் உட்பட 50க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

13.06.90 ஐலண்ட்

இந்தியக் கடற்படை இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பாக்குநீரிணை கடற்பகுதியில் ரோந்துச் சேவையைத் தீவிரப்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையங்கள் மீதான தமது தாக்குதல்களை நிறுத்தும்படி பிரபாகரன் சொன்னால் மட்டுமே நிறுத்துவோம் என புலிகளின் பேச்சாளர் கூறியுள்ளார்.

14.06.90 டெய்லி நியூஸ்

இலங்கைக் கடற்படை, எஸ்.ரி.எப், எஸ்.எல்.ஏ.எப் துப்பாக்கிக் கெலிகள், சியா மார்செட்டி குண்டு வீச்சு விமானங்கள் ஆகியன வடக்கு, கிழக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

14.06.90 வீரகேசரி

கல்முனை கொன்வென்ற் ஒன்றின் மீது செல் விழுந்ததால் 7 மாணவிகள் – கொல்லப்பட்டனர். பொதுமக்கள் இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அயல் கிராமங்களுக்குச் சென்றுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, செட்டித்தெரு ஆகிய பகுதிகளில் திடீர்ச் சோதனைகள் இடம்பெற்று பல தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

புலிகளுடனான விவகாரத்தை நாமும் ஆயுதப்படைகளும் உரியமுறையில் கையாண்டு அவர்களை அடிபணியச் செய்வோம். இப்போது நடைபெறுவது வடக்கு–கிழக்கில் உள்ள கிறிமினல்களுக்கு எதிரான போரே. புலிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களின் கழுத்தைப் பிடிப்போம் என்று இராஜாங்க அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

14.06.90 சன்

நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து மூவாயிரம் துருப்புகள் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

14.06.90 வீரகேசரி

முப்படைகள் மற்றும் பொலிசாரினது லீவுகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் சேவைகளில் உள்ளோரில் தற்போது விடுமுறையில் இருக்கும் அனைவரையும் உடனடியாக அவர்களின் கடமை நிலையங்களுக்குத் திரும்புமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. பாதுகாப்புப் படைகளின் தேவைகளுக்கு நாட்டின் எப்பகுதியிலும் பஸ்களைக் கொடுத்து உதவுமாறு போக்குவரத்து சபைகளுக்கு அரசாங்கம் பணித்துள்ளது.

புலிகளின் தலைவர்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய–போது நாடு பிளவுபடுவதை தாம் விரும்பவில்லையென்றே கூறினர். அதனால் தான் அரசியலமைப்புக்கான 6ஆவது திருத்தத்தையும் ரத்துச்செய்யுமாறு – கோருவதாகச் சொன்னார்கள். தங்களுக்கு இசைவாக நடக்காத தமிழர்களை புலிகள் கொலை செய்தார்கள். அண்மையில் சாம் தம்பிமுத்துவையும் கொலை செய்தார்கள் – கட்டிடநிர்மாணத்துறை அமைச்சர்

www.tamilarangam.net

தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு தமிழ்ழமே முடிந்த முடிபு என தீர்மானிக்கப்பட்டது. இந்த முடிவைத் தமிழ்த் தலைவர்கள் நிறைவேற்ற முடியாமல் - கைவிட்டபோதுதான் பிரபாகரன் தலைமையில் சயனைட் குப்பியும், துப்பாக்கியும் ஏந்திய போராளிகள் கூட்டம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது - காசி ஆனந்தன்

15.06.90 வீரகேசரி

சிங்கள இராணுவத்தினராலும், பொலிசாராலும் தமிழ்ப் பகுதியில் அமைதி குலையும் என நாம் பல தடவைகள் இலங்கை அரசாங்கத்திற்குக் கூறிவந்தவோம். எனப் புலிகள் யாழ்ப்பாணத்தில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்யும் படலம் தொடர்ந்து நடைபெறுகிறது. இதுவரை சுமார் 1,200 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விமானம், கெலி மூலமாக கிழக்கில் குண்டுவீச்சு நடத்தப்படுவதுடன் கடலிலிருந்தும், முகாம்களிலிருந்தும் செல் தாக்குதல் நடத்தப்படுகிறது. படையினரின் தாக்குதல்களால் கல்முனை, வாழைச்சேனை, பகுதிகளில் முஸ்லீம் மக்கள் பலர் கொல்லப்பட்டு, பல வீடுகளும் சேதமடைந்துள்ளன.

15.06.90 டெய்லி நியூஸ்

100க்கும் அதிகமான பொது மக்கள் இலங்கைப்படைகளால் கொல்லப்பட்டும், பல பெண்கள் கற்பழிக்கப்பட்டுமுள்ளனர் என புலிகள் இலண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

திருச்சிராப்பள்ளியில் புலிகளைச் சேர்ந்த 15பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15.06.90 சன்

15.2.89இலிருந்து 1.3.90வரையிலான காலப்பகுதிக்குள் 624 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொல்வத்த பாலத்தில் 3 மனிதத் தலைகள் காணப்பட்டன.

16.06.90 வீரகேசரி

தலவாக்கொலையில் இடம்பெற்ற மண்சரிவில் 21பேர் உயிரிழந்தனர்.

வடக்கு கிழக்குச் சம்பவத்தின் பின்னணியில் இஸ்ரேலியர்கள் செயற்படுவதாக சபாநாயகர் தெரிவித்தார். ஊஸி எனப்படும் இஸ்ரேலியரின் ஆயுதம் வடக்கு கிழக்கில் பயன்படுத்தப்படுகிறதாம்.

புலிகள் வசம் சுமார் 800 பொலிசார் இருப்பதாகவும், திரியாய், கின்னியா காவல் நிலையம் புலிகளால் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் அரச அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர் வேலைத் தளங்களில் வேலை செய்துவிட்டு, அங்கு இரவு நேரங்களில் தங்கும் வாலிபர்கள் இரவோடிரவாக கைது செய்யப்படுகின்றனர்.

17.06.90 வீரகேசரி

இறுதிவரை ஜனஉயக வழிக்கு வராத ஜே.வி.பி.யினருக்கு நடந்ததுதான் புலிகளுக்கும் நடக்கும் - பிரேமதாச

பலாலி இராணுவ முகாமிலிருந்தும், கோட்டை முகாமிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட செல் தாக்குதல்களாலும், ஆகாய மார்க்கமான தாக்குதல்களாலும் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர். பலாலியை அண்மித்த பகுதிகளில் உள்ளவர்கள் அவரங்கால், அச்சுவேலி பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்து கோவில்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வடக்கு-கிழக்கு சமாதானக்குழுத் தலைவரான கமித் புலிகளின் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது சகல மோதல்கள், கொந்தளிப்புகள் யாவற்றையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இணக்கம் காணப்பட்டது.

இராணுவத்திற்கும், புலிகளுக்குமிடையிலான மோதலின்பின் வவுனியா நகரம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இத் தாக்குதல்களில் 12 பொதுமக்கள் கொல்லப்

www.tamilarangam.net

பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கூமாவடிக் குளம் பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர். இனியும் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என்ற பயத்தில் பலர் யாழ், மன்னார் பக்கங்களாகப் புறப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, வவுனியா நகரங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

18.06.90 வீரகேசரி

வடக்கு-கிழக்கில் தற்போது தொடரும் சம்பவங்களின் காரணமாக 24 பேர் இராமேஸ்வரத்தை வந்தடைந்து மண்டபம் முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

16.06.90 முதல் யுத்த நிறுத்தம் அமுலாக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற மோதல்களில் 40,000பேர் அகதிகளாக பல்வேறிடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இப் பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. காயமடைந்தோர் மருத்துவ வசதிகளின்றித் தவிக்கின்றனர்.

அரசுக்கும், இந் நாட்டுக்கும் எதிராக புலிகள் தொடுத்திருக்கும் போர் தமிழ்பேசும் மக்களின் நலன்களுக்கு முற்று முழுதாக எதிரானது என்பதை இச் சபையின் பதிவேட்டில் இடம்பெறும்வண்ணம் திட்டவட்டமாகக் கூறிக்கொள்கின்றேன். ரெரோவைப் பொறுத்தவரையில் அதிகார வெறி கொண்டலையும் அதிகாரக் கூட்டமொன்றினால் விடுக்கப்பட்டிருக்கும் இச் சவாலைச் சந்திப்பதில் எமது நிபந்தனையற்ற பூரண ஆதரவை இந்நாட்டின் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் வழங்க நாம் தயாராகவிருக்கின்றோம் — பாராளுமன்றத்தில் ரெலோ எம்.பி

புலிகள் முன்னரைப் போன்று இராணுவ ரீதியில் தம்மைப் பயன்படுத்திக் — கொள்ள அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. புலிகள் ஆயுதங்களைக் கையளிக்காதவரை மாகாணசபைத் தேர்தலை நடத்துவது அர்த்தமற்றது —புளொட்

19.06.90 வீரகேசரி

வடக்கு, கிழக்கில் அகதிகளாக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்காக உணவு, உடைகளைத் தந்துதவுமாறு பொது ஸ்தாபனங்கள், தொண்டர் ஸ்தாபனங்களிடம் சமூகசேவைத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இ.தொ.கா.வின் ஆதரவின்றி எந்தஒரு கட்சியும் இலங்கையை ஆள முடியாது. — தொண்டமான்

வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வரும் வன்செயல்களை அடக்கி சமாதானத்தை ஏற்படுத்த அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அகில இலங்கை முஸ்லீம் லீக் மனப்பூர்வ ஆதரவு வழங்குவதாகக் கூறியுள்ளது."

வடக்கு-கிழக்கு நிலைமையைச் சமாளிக்க யுத்தக் கப்பல்கள், விமானங்கள் வாங்கவேண்டியுள்ளது — இராஜாங்க அமைச்சர்

யுத்த நிறுத்தம் கைவிடப்பட்டது. கிழக்கில் 2 முனைகளில் மோதல்கள் இடம் பெற்றன.

கிழக்கில் புலிகள் மீண்டும் காட்டுக்குள் போகத் தலைப்பட்டுவிட்டார்கள் என்ற ஐயம் மக்களிடம் எழும்பியுள்ளது.

புலிகளை ஒழிக்கும் நடவடிக்கைக்கு நாம் இடைஞ்சலாக இருக்க மாட்டோம். புலி ஒழிப்பு நடவடிக்கைகளால் பொதுமக்கள் பாதிக்கக் கூடாது. இராணுவ நடவடிக்கைகள் மக்கள் ஆதரவைப் பெறக்கூடியதாக அமையவேண்டும். இந்த யுத்தத்தில் பாசிசவாதிகளையொழிக்க அரசு எடுக்கும் நடவடிக்கையை ஏனைய எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து நாம் ஆதரிக்கின்றோம்— ஈ.பி.ஆர்.எல்.எவ்

புலிகளுடன் அரசு நீண்டகாலம் பேசியது. இந்தப் பேச்சு எந்தக் கட்டத்தில் எப்படி முறிந்தது என்று யாருக்கும் தெரியாது. — ஈரோஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈ.பி.ஆர்.எல்.எவ் மாகாண அரசு முட்டாள்தனமாக பொலிஸ் நிலையங்களைத் தாக்கி மடிந்தபோனது. அதைப் போலவே இன்று புலிகளும் ஒரு முட்டாள்தனத்தைச் செய்துள்ளனர். இந்த முட்டாள்தனங்களால் வடக்கு–கிழக்கில் உள்ள அப்பாவி தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களே பாதிக்கப் படுபவர்களாகும் – முஸ்லீம் கொங்கிரஸ்

20.06.90 வீரகேசரி

இன்று நமது படைவீரர்கள் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் இந் நாட்டையும், எம்மையும் காப்பாற்றுவதற்காகவே சிந்தப்படுபவையாகும். நாட்டு மக்களைப் பாதுகாப்புப் படையினரின் பின்னால் அணிதிரளச் செய்ய வேண்டும். சகல மூலவளங்களும் போருக்காகத் திரட்டப்படவேண்டும். நாட்டில் உள்ள சகல கெலிக்கொப்டர்களும் படையினரின் பயன்பாட்டுக்காக ஒப்படைக்கப்படவேண்டும் – பாராளுமன்றத்தில் சு.க. எம்.பி

வடக்கு, கிழக்கில் இஸ்ரேல் பயிற்சியளிப்பதாகக் கூறப்பட்டது. இந்த அரசு கடந்த காலங்களில் என்ன செய்தது? மொஸாட்டின் உதவியை அரசு பெற்றதானே செய்தது? ஏகாதிபத்திய சக்திகள் இந்நாட்டில் ஊடுருவி அமைதியைக் குலைக்கின்றன. எல்.ரி.ரி.ஈக்கு அரசுதான் ஆயுத உதவியளித்தது–வாசுதேவ

போர்க்களத்தில் நிற்கும் 1 இலங்கை படைவீரன் 10 இந்திய அமைதி காக்கும் படைவீரனுக்குச் சமானமானவன். இதை பிரபாகரனும், அவரது அடியாட்களும் விளங்கிக்கொள்ளவில்லை. பிரபாகரனும், அவரது அடியாட்களும் இலங்கையில்தான் சாகவேண்டும். அவர்கள் இருக்குமிடங்கள் எங்களுக்குத் தெரியும்

எமது ஏஜென்டுகள் வடக்கில் இருக்கிறார்கள். இந்திய அமைதிகாக்கும்படை 4 தடவைகள் பிரபாகரனைப் பிடித்தது. ஆனால் அந்த 4 தடவைகளும் 'ரோ' தலையிட்டு அவரை விடுதலை செய்தது. புலிகளுடன் நாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் 2 விடயங்களில் எமக்குதவின. இந்தியப்படையை இலங்கையிலிருந்து வெளியேற்றியது. அடுத்தாக எமது பாதுகாப்புப் படைகளை முழுமையாகப் பயன்படுத்தி ஜே.வி.பி.யை அடக்கியொடுக்கியது. புலிகளுடனை இப் போரில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ இயக்கங்கள் எமக்கு முழுமையான ஆதரவைத் தருகின்றன – பாதுகாப்பு அமைச்சத்

வவுனியா மற்றும் மதவாச்சி போன்ற எல்லைக் கிராமங்களில் வசிக்கும் சிங்களக் கிராமவாசிகளுக்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

21.06.90 வீரகேசரி

சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள தொடர்மாடி வீடொன்றில் ஈ.பி.ஆர்.எல்.எவ் முக்கியஸ்தர்கள் பத்மநாபா தலைமையில் மத்திய குழுக் கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்தபோது இடம்பெற்ற திடீர் துப்பாக்கிப் பிரயோகத்தில் பத்மநாபா, கிருபாகரன், யோகசங்கரி உட்பட 16பேர் கொல்லப்பட்டனர். இரு அம்பாசிடர் கார்களில் வந்த ஆயுதபாணிகளே இத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சென்னையிலுள்ள அனைத்து தமிழ் போராளிகளையும் கைது செய்யுமாறு கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

கல்முனைப் பிரதேசத்தில் 10,000க்கும் மேற்பட்டோர் கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

மலையகம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புப்படையினரால் விசாரணை என்ற போர்வையில் கைது செய்யப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் தமிழக அரசினால் நிராயுதபாணிகளாக்கப்பட்ட எமது கட்சியின் செயலாளர்–நாயகம் உட்பட 14 தோழர்களை புலிகள் படுகொலை செய்ததை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன். எமது போராட்டப் பாதையில் ஒவ்வொரு இழப்பும் எமது இலட்சியத்திற்கு உரமூட்டுவதாகவே அமைந்

www.tamilarangam.net

திருக்கிறது – ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்.

பிரேமதாசவும், புலிகளும் ஒருவரையொருவர் திருப்திப்படுத்துவதற்காகவும், சர்வதேசப் பிற்போக்குச்சக்திகளை சாந்தப்படுத்தவும் மேற்கொண்ட தந்திரோபாயங்கள் ஈற்றில் தமிழ் பேசும் மக்களின் மீதான புதியதொருபோராக உருவெடுத்துள்ளது. புலிகள் தலைமையினது வீம்புத்தனத்தைப் பயன்படுத்தித் தமிழ் பேசும் மக்கள் மீது எதிர்ப்புரட்சிகர அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிடும் தயாரிப்பு நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் முற்போக்குச் சக்திகளையும், முஸ்லீம்களையும் அடக்கிக் கட்டுப்படுத்தும் எல்.ரி.ரி.ஈ.யினது நடவடிக்கைகள் பிற்போக்குத்தனமான யூ.என்.பி.க்கு இந்த வாய்ப்பையும், பலத்தையும் வழங்கியுள்ளது. தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் இந்த எதிர்ப்புரட்சிகரப் போருக்கு எதிராக இந்த நாட்டிலுள்ள இடதுசாரி முற்போக்குச் சக்திகளை திரண்டெழச் செய்து முறியடிக்கும் அதேவேளை தமிழ்பேசும் மக்களது சுயநிர்ணய உரிமைகளை அவர்களுக்கு கிடைக்குமாறு செய்யவும் வேண்டும் – நவசமசமாஜக் கட்சி

மாத்தளை, கஞ்தாவளைப் பகுதியில் கைது செய்யப்பட்ட 300 தமிழ்இளைஞர்களையும் உடனடியாக விடுவிக்கும்படி லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் பாதுகாப்பமைச்சைக் கேட்டுள்ளது.

கல்முனைப் பிரதேசத்தில் நடைபெற்ற ஆகாயமார்க்கமான தாக்குதல்களில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கருத்துகளை கருத்துகளால் சந்திக்கும் ஆண்மை இல்லாமல், மாற்றுக் கருத்துடையவர்களை ஒழித்துக்கட்டும் தனிநபர் பயங்கரவாதச் செயல்கள் கேவலமானவை. கோழைத்தனமானவை. புலிகளது கடந்தகால வரலாறுகள் புலிகளால் கொல்லப்பட்ட ஜனநாயக சக்திகளது இரத்தத்தால் கறைபட்டவை. துப்பாக்கிகள் இல்லாமல் சீவிக்க முடியாத புலிகள் ஜனநாயக வழிமுறைக்கு வருவது முடியாத காரியம் –ஈ.பி.டி.பி.

மட்டக்களப்பு, அம்பாறை, பெரியபோரதீவு, தாத்தாமலை ஆகிய இடங்களிலுள்ள வீடுகளுக்கு இலங்கைப்படையினர் தீ வைத்துள்ளனர்.

கணபதிபுரத்தில் பிரஜைகள் குழுத்தலைவர் கனகரத்தினம் இலங்கைப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். சித்திரவேல் என்பவரின் கைகளை இதேபடையினர் வெட்டியுள்ளனர். கஞ்வாங்சீக்குடி, கும்புறுமூலை, புனானை ஆகிய இடங்களில் குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதல்களில் 1 குழந்தையும், 3பேரும் கொல்லப்பட்டுள்ளனர். – புலிகள்

22.06.90 வீரகேசரி

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகியன அரசின் கட்டுப்பாட்டின் கீழ் முழுமையாக வந்துவிட்டன. இங்குள்ளோர் தம்மிடமுள்ள ஒவ்வொரு ஆயுதத்தையும் பொலிசாரிடமோ, படையினரிடமோ ஒப்படைக்க வேண்டும். ஒருவார கால அவகாசம் இதற்கென கொடுக்கப்படுகிறது. ஒரு வாரத்தின் பின் ஒவ்வொரு அங்குல இடமும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படும்– ரஞ்சன் விஜேரத்ன

மொனராகலைப் பகுதியில் தொழிலாளர்களின் 5 லயன்கள் இனந்தெரியாத கோஷ்டியினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

பல நாட்களாக உண்ண உணவின்றி தாங்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருப்பதாகவும், பணம் இருந்தால்கூட குழந்தைகளுக்குப் பால்மா வாங்க முடியாமலிருப்பதால் குழந்தைகளும் பலவீனமடைந்துகொண்டு போவதால் முடிந்தளவு அவசர உணவு உதவிகளை அனுப்பிவைக்குமாறு மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் கொழும்பில் தங்கியுள்ள தமிழர்கள் பலருக்கு உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

23.06.90 வீரகேசரி

வணுகல நகரில் நின்ற லோகமூர்த்தி சந்தோசம் என்ற இருவர் வான் ஒன்றில் வந்த சிவிலுடை அணிந்தோரால் அழைத்துச் செல்லப்பட்டு மறுநாள் துப்பாக்கித்தட்டுக் காயங்களுடன் வீதியில் சடலமாகக் கிடந்தனர்.

கல்முனைக்கு வந்து சேர்ந்த இராணுவத்தினரால் 30க்கு மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அம்பாறைக்கு விசாரணைக்கென கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

இலங்கையரசின் தேசிய பாதுகாப்புநிதிக்கு இதுவரை 20இலட்சம் ரூபா சேர்ந்துள்ளது.

24.06.90 வீரகேசரி

நிந்தவூர் கிராமத்தில் 65 முஸ்லீம்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாக வெளிவந்த தகவல் முற்றிலும் பொய்யானதென கல்முனைப் பிரதேச சமாதான ஒருங்கிணைப்புக்குழுச் செயலாளரான பாண்டியூராஜ் தெரிவித்தார்.

கல்முனை, பண்டிருப்பு, பெரிய நீலாவணை, மணல்சேனை ஆகிய கிராமங்களின் சில பகுதிகளில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல்களில் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஜவா பகுதியில் திடீர் திடீரென மலையக இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர். விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படும் இளைஞர்கள் தாக்குதல்களுக்குட்படுத்தபடுகின்றனர். பலர் கொல்லப்படுகின்றனர்.

மலையகத் தொழிலாளர்களின் லயன்களுக்குள் புகும் ஆயுதபாணிகள் கொள்ளையடிப்பதுடன், லயன்களுக்கும் தீவைத்துவருகின்றனர்.

கல்முனைப் பாத்திமாக் கல்லூரி, கல்லாறு போன்ற இடங்களில் அகதிகளாகத் தங்கியிருக்கின்ற பொதுமக்களில் 40க்கு மேற்பட்டோர் அகதி முகாமிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் – திகாமடுல்ல எம்.பி

வெளிநாடு செல்லும் இலங்கையர்கள் கொண்டுசெல்லும் பத்திரங்கள், நாலர்கள், வீடியோ கசெட்டுகள் ஆகியவற்றின் மீது கட்டுநாயக்க விமானநிலையத்தில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இலங்கை பற்றிய தவறான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தடுப்பதே இந் நடவடிக்கையின் நோக்கம்.

25.06.90 வீரகேசரி

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா மாவட்டத்தில் அகதிகளாகவுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ளனர்.

யாழ் ஆஸ்பத்திரி மூடப்பட்டுள்ளது.

ஏ.கே. அண்ணாமலை, விஜயானந்தன் – போன்ற இடதுசாரி, சோசலிச முக்கியஸ்தர்களைக் கொன்றதன் மூலம் மக்களின் சம்மதமின்றி ஈவிரக்கமற்ற அழித்தொழிப்புகளினூடாக புலிகள் தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக இருக்க எண்ணுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஓர் அடக்குமுறைச் சமுதாயத்தினை உருவாக்கி அதன் உயர்மட்ட ஆட்சியாளர்களாகத் திகழ்வதே புலிகளின் நோக்கம். புலிகள் தமிழ் பேசும் பகுதிகளில் தமது மேலாதிக்கத்தைச் செலுத்துவதற்கு இன்றைய அரசு உதவியுள்ளது. புலிகளைப் பயன்படுத்தி தனது ஆட்சியைப் பலப்படுத்துவதே அரசின் எண்ணமாயிருந்தது இப்போது இந்த இரு ஆட்சியாளர்களும் தங்களது ஆட்சியதிகாரத்தை வெவ்வேறாக நீடிப்பதற்காகவே இந்த யுத்தத்தை முடுக்கிவிட்டுள்ளனர் –நவ சம சமாஜக்கட்சி

26.06.90 வீரகேசரி

மட்டக்களப்பு நகருக்குள் 30 க்கும் மேற்பட்ட இராணுவ வாகனங்கள் சகிதம் பிரவேசித்த இராணுவம் நகரின் கேந்திர இடங்களில் நிலைகொண்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர்கள் கொலை செய்யப்பட்டதையடுத்துக் கைதாகி சென்னை மத்திய சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 260 தமிழ் இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். இவர்கள் சிறையில் வைத்துத் தாக்கப்பட்டதையடுத்து இரத்தவாந்தியும், மயக்க நிலையும் அடைந்துள்ளனர். ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட், ஈ.என்.டி.எல்.எவ் ஆகிய இயக்கங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்..

கல்முனைப் பகுதியில் பல்வேறிடங்களில் 29 சடலங்கள் எரியுண்ட நிலையில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

காரைதீவுப் பகுதியில் 20க்கு மேற்பட்ட சடலங்கள் வீதிகளில் கிடந்தன.

கல்முனை இராணுவ முகாமைச் சுற்றி 300 யார் சுற்றளவுக்குள் இருந்த சுமார் 25 வீடுகளைப் பொறுப்பேற்ற கொண்ட இராணுவத்தினர் அவ் வீடுகளில் வசித்த குடும்பங்களை வெளியேற்றியுள்ளனர்.

கொழும்பு வீதிகளில் பிரபல சிங்கள சினிமா நடிக, நடிகைகள் பாதுகாப்பு படையினருக்கு நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர்.

27.06.90 வீரகேசரி

கல்முனை நகர வீதிகளில் எரியுண்ட நிலையில் காணப்பட்ட 100க்கும் அதிகமான சடலங்கள் ஒன்றாக எரிக்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்டோரில் இளைஞர்களே அடங்குகின்றனர்.

அக்கரைப்பற்று பகுதியில் இராணுவத்தினர் வீடுவீடாகத் தேடுதல் நடத்துகின்றனர். இதன்போது 100க்கும் அதிகமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டு 4 பஸ்வண்டிகள் மூலம் கல்முனை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு சம்பவங்களின் காரணமாக சுமார் 3 இலட்சம் மக்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறி சுமார் 93 அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

வடக்கு-கிழக்குக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி பத்திரிகையாளர் எவரும் செல்ல முடியாதென அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

தொழில் ஒப்பந்த அடிப்படையில் வேலைவாய்ப்புகளின் பொருட்டு குவைத் சென்ற 10,000 இலங்கைப் பெண்கள் எதுவித வேலை வாய்ப்புமின்றி அநாதரவான நிலையில் உள்ளதை நேரில் கண்டதாக தொழில் அமைச்சர் கூறியுள்ளார்.

28.06.90 வீரகேசரி

கல்முனையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் 90 இளைஞர்களைக் கைது செய்தனர். கைதானோரில் பாடசாலை மாணவர்களும், பரீட்சை எழுதிவிட்டு பாடசாலையைவிட்டு அண்மையில் சென்றோருமே பெரும்பான்மையினர்.

இலங்கையிலிருந்து தமிழகத்திற்குவரும் அகதிகள் தொகை மேலும் அதிகரித்துள்ளது. மண்டபம் முகாமில் உள்ள அகதிகளின் எண்ணிக்கை 3,000ஐத் தாண்டியுள்ளது. வந்து சேரும் அகதிகளில் பெரும்பாலோனோர் தலைமன்னாரைச் சேர்ந்தவர்கள்.

இராணுவசேவைக்கு அரசாங்கம் ஆட்களைத் திரட்டத் தொடங்கியுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சைக்கு இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் ஆஜராகியிருந்தனர்.

வவுனியா, முல்லைத்தீவு ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டுள்ளன.

வவுனியா பகுதிகளில் 50க்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

கூமாங்குளம், வேப்பங்குளம், பண்டாரிக்குளம் கிராமங்களில் எரிக்கப்பட்டவீடுகளில் பலரின் எரிந்த சடலங்கள் காணப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நாட்டில் இனிவரும் தேர்தல்களில் வாலிபர்களுக்கு கணிசமானளவு இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்ற கோசத்தை அரசாங்கம் எழுப்பிவரும் இவ்வேளையில், சென்ற காலங்களில் ஜே.வி.பி. என்ற போர்வையில் பல வாலிபர்கள் டயர்களுக்கும், ஆறுகளிலும் சங்கமமாகியுள்ளனர் - கம்பகா மாவட்ட எம்.பி

29.06.90 வீரகேசரி

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் முழுமையாக எமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டன. மூதூரைக் கைப்பற்றியதும் திருகோணமலை மாவட்டமும் முழுமையாக எம்வசமாகிவிடும். வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவில் மோதல் இன்னும் நடக்கிறது-பாதுகாப்பமைச்சர்

இராகலையில் 6 தொழிலாளர்கள் - கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்துச் சுமார் 1,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

வெல்லாவெளி, பாலையடிவட்டை, கோவில் போரதீவு, பெரிய போரதீவு, முனைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 5,000 மக்கள் படுவான்கரை பிரதேசத்தில் தங்கியுள்ளனர். இந்த அகதிகளுக்கு உணவு உட்பட இதுவரை எந்த நிவாரணங்களும் கிடைக்கவில்லை

மட்டக்களப்பில் 25 கட்டிடங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. முக்கிய வீதிகளில் பாரிய பீரங்கிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

யாழ் நகரில் ஒரு பகுதி தரைமட்டமாகியுள்ளது. குண்டுவீச்சில் சேதமடைந்த கட்டிடங்களில் கன்னியர் மடமும், அநாதைகள் விடுதியும் அடங்குகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணிய பகுதியிலிருந்து 10,000 குடும்பங்கள் தமது உடைமைகளை விட்டுவிட்டு இடம் பெயர்ந்துள்ளன.

பாதுகாப்பு நிதிக்கென பல தொண்டர் ஸ்தாபனங்களும், அரச, தனியார் துறை, கூட்டுத்தாபனங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் நிதி வசூல் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் ஆதரவாளர்களின் தயவு இல்லாமல் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர்களை அந்தளவு சுலபமாகக் கொலைசெய்துவிட்டு 7 புலிகளும் தப்பியிருக்க முடியாதெனப் பொலிசார் கூறுகின்றனர்.

பத்மநாபா உள்ளிட்ட போராளிகளை சுட்டுக் கொன்றவர்களைப் பழிவாங்காமல் விடமாட்டோம். புலிகளின் அராஜகத்துக்கு முடிவு கட்டுவோம் என மண்டபம் அகதிகள் முகாமில் நடந்த இரங்கல் கூட்டத்தில் ரெலோ, புளொட், ஈ.என்.டி.எல்.எவ், ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டனர்.

30.06.90 வீரகேசரி

வடக்கு-கிழக்கில் தொடர்ந்து சண்டை நடைபெறுவதால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவு வகைகளை அனுப்பி வைக்க முடியாதிருப்பதாக அரசாங்க உயரதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 17,588 குடும்பங்கள் அகதிகளாகப் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

கல்முனைப் பகுதியில் இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்கின்றன. பலர் கைதாகியுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் அகதிகளாக 1இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

தேசிய பாதுகாப்பு நிதி 2கோடி 4 இலட்சம் ரூபாவாகச் சேர்ந்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் கேள்விகளும் பரதேசியின் பதில்களும்?!

? ஆசிரியர் தலையங்கம், கட்டுரை, கதை, கவிதை, கடிதங்கள் என்று வெளியாகும் சஞ்சிகைகள் எல்லாம் ஒரே பொருளடக்கத்தைத்தானே கொண்டிருக்கின்றன. அப்படியிருக்க ஏன் இவ்வளவு சஞ்சிகைகள்?

— அருமைநாயகம்

! பழரசமும், சீனியும், தண்ணீரும் கலவை என்ற அடிப்படையிலிருந்தபோதும் சிவப்பு, மஞ்சள், பச்சை.. எனப் பல நிறங்களில் கலவை செய்யும் சர்பத் கடைக்குள் நிற்கின்றோம்.

சிலவேளை சில நிறங்கள் மிகையாகவும் இனிக்கலாம். சர்பத்தில் கலந்திருப்பது சீனியா? சக்கரினா? என்பதைத் தெரிந்துகொள்ள முடியாதவரை பிரச்சினைதான்.

சிவப்பு சர்பத்திலும் கூடப் பலவகையுண்டு! நிறங்கள் தரும் பயன்பாட்டைவிட தரும் ஏமாற்றங்களே அதிகம்.

? இங்கு வளரும் சிறார்களைத் தமிழ் படிக்கவிடுவதால்..?

— மு. தேவி

! இது ஒரு ஆய்வுக்குரிய வினா. இருந்தபோதும் அடிப்படையில் அதிகம் மாற்றமில்லை. அதாவது தன்னிடமுள்ள அறிவை அல்லது தேவை பற்றிய விண்ணப்பத்தைப் புரிந்துகொள்ளவோ, ஒரு குழுவுக்கு கொடுப்பதற்கோ உரிய வடிவங்களை அமைப்பதற்கே மொழி உதவுகிறது. இதற்கு மேலாக எந்தப் பயன்பாடோ பெருமையோ மொழிகட்கு இல்லை.

அன்னையர் மொழி என்றோ, இறைவனால் அருளப்பட்டது என்றோ பெருமைப்பட எதுவும் இல்லை. சூழலில் வாய்ப்புள்ள மொழியோ, மொழிகளோ பரிட்சயமாகின்றன. ஏனைய சில கற்கப்படுகின்றன.

இங்குள்ள எமது குழந்தைகளுக்கு குடும்பச் சூழலில் தமிழ் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழியும், புறச்சூழலில் நாம் அகதிகளாகவிருக்கும் நாட்டு மொழியும் சூழல் மொழிகளாக வுள்ளன.

பாடசாலைகளில் அமைப்பு வடிவத்தோடு கற்க வேண்டிய தேவையும், புறச்சூழலில் அதிக பயன்பாடும், தேவையும் தமிழ் மொழியைவிட நாமிருக்கும் நாட்டு மொழிக்கே இருப்பதனல், சிறுர்கள் தமிழைவிட இந்நாட்டு மொழியைப் பின்பற்றுவதில் அதிக அக்கறை காட்டுவது தவிர்க்க முடியாததாகிறது.

கற்கப்படும் மொழிகள் என்ற பகுதிக்குள் நாம் தமிழை எடுத்துக்கொண்டால், குடும்பச் சூழலும் உதவினல், கற்கப்படும் மற்றைய மொழிகளைக் காட்டிலும் தமிழில் பரிச்சயப்படுவதற்கு வாய்ப்புண்டு. இதனைக் கற்பதால் எமது சமூகத்திடமிருந்தும் சிறுர்கள் கலாச்சாரம், உறவுகள், அறிவியல் என்பவற்றையறிந்து கொள்ளவும் வாய்ப்புண்டு என்பதை மறுக்கமுடியாது.

*

? உயிராபத்து என இங்கு அரசியல் தஞ்சம் கோரியவர்கள் இமிக்கிறன்ற் கிடைத்ததும் இலங்கை போய்வருகிருர்களே?

— ச. ஜெகதீசன்

! உயிராபத்து என்பதில் உண்மையில்லாமலும் இல்லை. ஒட்டியுறவாடிய அனைத்தையும் அறவே மறந்துவிடும் வகையிலும் மனிதர்கள் இல்லை.

பொய் மட்டுமல்ல, போர்களும் கூட பொருளாதாரச் செயற்பாடுகளேயே பின்னணியாகக் கொண்டவை.

எனினும் இலங்கை போய்வருபவர்கள் இயலுமானவரை நேரடியாக இங்கிருந்து போகாமல் மாற்றுவழிகளைக் கையாளுவதன் மூலம், அரசியல் தஞ்சம் கோரிக்கொண்டிருப்பவர்களுக்கேற்படும் பாதகங்களைத் தவிர்க்க உதவலாம்.

*

? காலனித்துவம், நவ காலனித்துவம் என்ருல் என்ன?

— சார்ல்ஸ்

! கடற் பயணங்கள், போர்கள் மதப் போர்கள்.. போன்றகாரணங்களால் காலத்துக்குக் காலம் ஒவ்வொரு நாடுகளும் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளை அடிமைப்படுத்தி, அவற்றை தமது ஆட்சியின் கீழ் வைத்திருந்தன. இந்த நடைமுறை இருந்தபோது அடிமைப்பட்ட நாடு அடிமைப்படுத்திய நாட்டின் (Colony) கொலனி எனப்பட்டது.

ஆதிக்கப் போட்டி காரணமாக ஒருநாட்டின் கொலனியாக இருந்த நாடு இன்னெரு நாட்டின் கொலனியாக மாற்றப்பட்டதுமுண்டு.

காலனித்துவ ஆட்சிமுறையின்

www.tamilarangam.net

ஆரம்பமும், வளர்ச்சியும், தேய்வும் 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி- 19ஆம் நூ. ஆ. முற் பகுதி வரையான காலத்துடனானது.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், மத்திய பகுதியிலும் ஏற்பட்ட தேசிய எழுச்சிகள் காலனித்துவ நிர்வாகங்களுக்குத் தலையிடியாயின. மனிதாபிமான சங்கங்கள், பொதுநல ஸ்தாபனங்கள் என்பனவும் உலகளாவிய - தொடர்புகளோடு எழுந்தன.

இந் நிலையில் காலனித்துவஆட்சிகளைத் தொடரமுடியாது - போய்விடுமோ என்ற அச்சம் அடிமைப்படுத்திய நாடுகளிடம் ஏற்பட்டது.

எனவே இதற்கான புதிய மார்க்கமொன்றை ஆய்வுசெய்த தன்படி தமது முதலீடுகளுக்குச் சந்தையாக இந்த அடிமைநாடுகளை ஆக்கிவிட்டனர். இம் மாற்றத்தைச் சுதந்திரம் என அறிவித்துவிட்டு அந்தந்த நாடுகளிலிருந்து இவர்கள் வெளியேறிவிட்டனர். இதுவே நவ காலனித்துவம் எனப்படுகிறது. (New Colonialation)

அப்போது நேரடி ஆட்சியினால் சுரண்டியதைவிட பன்மடங்கு அதிகமாக இலாபமடையும் வாய்ப்பு இப்போது இவர்களுக்குக் கிட்டியது.

அரசுகள்தான் மாறின. ஆனாலும் ஆட்சிகள் மாறவில்லை.!

? மாற்றப்பட்ட புதிய வெளிநாட்டவர் சட்டங்கள் எதை குறிக்கின்றன?

— சிறீ

! சாறுள்ள கரும்பம் கழிகளை மூங்கில் என்று முத்திரை குத்தித் தருவிக்கலாம். அவற்றின் இறுதித்துளி ...பிழியப்படும் வரை ஐரோப்பிய ஆலைச் சுவர்களுக்குள் அவை தங்க அனுமதியுண்டு.

சக்கை தள்ளும் 'பெல்ற்'றுகளின் முகங்கள் மட்டும் மூன்றாம் உலகநாடுகளில் திறக்கப்படும். ஆலைகளின் நோக்கத்திற்கு முரணாகத் திமிறும் கரும்புகளும் சக்கை தள்ளும் பட்டிகளில் இடப்படலாம்.

**இப் பகுதிக்கு உங்கள் கேள்விகளை பரதேசியார் எதிர்பார்க்கிறார். ஒருவர் எத்தனை கேள்விகளையும் எழுதியனுப்பலாம்.**

www.tamilarangam.net

## தேசத்தின் ஒலிப்புகள்

பிரஜைகள்

கடந்த மாதம் 7ஆம் திகதி வவுனியாவில் இருந்து புறப்பட்ட இலங்கை இராணுவத்தின் தொடர்வண்டிகள் நெடுங்கேணியிலுள்ள புலிகளின் வீதித் தடையை மீறியதைத் தொடர்ந்து கடந்த 13 மாதங்களாக அமுலிலிருந்த இலங்கையரசு-புலிகளுக்கிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் முதல்முறையாக மீறப்பட்டது.

தடைகள் போடப்பட்டிருப்பது தெரிந்தும், அதை மீறிச் செல்ல வேண்டாமென புலிகள் எச்சரிக்கை செய்தும், அதை மீறிச் சென்ற இலங்கை இராணுவத்தினரை நோக்கி புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இராணுவத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு முன்பாக புலிகள் ஆகாயத்தை நோக்கிச் சுட்டதாகவும், பதிலுக்கு இலங்கை இராணுவமும் ஆகாயத்தை நோக்கிச்சுட்டுவிட்டு துப்பாக்கிகளுடன் வீதியில் குதித்ததாகவும், அதைத் - தொடர்ந்தே புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறின.

இதைத் தொடர்ந்து உடனடியாக யாழ் விரைந்த அமைச்சர் கமீத் நிலைமைகளைச் சமாளித்து போர்நிறுத்தத்தை - மீள உறுதிசெய்துகொண்டு வந்தார்.

இராணுவம் வவுனியாவை நோக்கித் திரும்பியது. பின் அது

www.tamilarangam.net

முல்லைத்தீவுக்குச் சென்றதற்கான காரணம் ஆராயப்படாமலேயே இவ்விசயம் 'அமந்து' போய்விட்டது.

ஆயினும் 10ஆம் திகதி மட்டக்களப்பு பொலிசார் ஒரு முஸ்லீம் இளைஞரைக் கைது செய்ததைத் தொடர்ந்து திரும்பவும் நிலைமை இறுக்கமடைந்தது.

அவ்வாலிபரைக் கைது செய்ததைப் பற்றி விசாரிக்கச் சென்ற புலிகளிடம் வாலிபரைப் பற்றிப் பேச மறுத்த பொலிசார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

இதனால், வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் யாரெனத் தெரிவிக்கும்வரை விடுவிக்க மாட்டோம் எனக்கூறி 2 பொலிசாரைப் புலிகள் கடத்திச் சென்றனர்.

இவர்களை விடுவிப்பதில் நடந்த இழுபறியின்- பின் திடீரென மறுநாள் புலிகளுக்கும் மட்டக்களப்பு பொலிசாருக்கும் இடையில் யுத்தம் மூண்டது.

12ஆம் திகதி மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தைக் கைப்பற்றிய புலிகள் வேகமாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்த ஏனைய 10 பொலிஸ் நிலையங்களையும் கைப்பற்றினர்.

பொலிசாரும் திருப்பித் தாக்கியதில் வேகமடைந்த இந்த யுத்தம் நாடு முழுவதும் பரவத் தொடங்கியது.

கிழக்கில் 600 பொலிசாரைப் புலிகள் கைது செய்தனர். இந்நிலைமை குறித்து அவசரமாகப் பேசவென யாழ்ப்பாணம் சென்ற அமைச்சர் கமீத் பலாலி இராணுவ முகாமில் 2 மணித்தியாலம் காக்கவைக்கப்பட்டபின் புலிகளால் அழைத்து செல்லப்பட்டார்.

இப் பேச்சுவார்த்தையின் போதும், மறுநாள் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதும் அறிவிக்கப்பட்ட இரு போர்நிறுத்தங்கள் மீறப்பட்டு மன்னார், திருமலை பொலிஸ் நிலையங்கள் கைப்பற்றப்பட்டதுடன் முழு அளவில் இராணுவ முகாம்கள் மீதும் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர்.

கமீத்-புலிகள் பேச்சுவார்த்தையும், ஒப்பந்தமும் முறிந்ததைத் தொடர்ந்து புலிகள் மீது பதில் தாக்குதலை நடத்தும்படி அரசு உத்தரவிட்டது.

பொலிசாருக்கு உதவியாக வான்படை மற்றும் கடற்படை, விசேட அதிரடிப் படை (எஸ்.ரி.எவ்) என்பன கிழக்கு மாகாணத்தை நோக்கி அனுப்பப்பட்டன.

அரசு பதில் தாக்குதல் நடத்தத் தொடங்கியபின் முதலில் மட்டக்களப்பும் பின் வவுனியாவும், திருமலையும் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் சண்டை தொடர்ச்சியாக நடைபெ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ற்றுவருகிறது.

யாழ் கோட்டையில் உள்ள இராணுவத்தினருக்கு உணவு, தண்ணீர் விநியோகம் இல்லாமல் தடைசெய்து அதன்மீது உக்கிர மாகப் போர் தொடுத்துள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

புலிகளால் மெச்சப்பட்ட 'கண்ணியவான்' ஆன இலங்கைஜனாதிபதி பிரேமதாச கண்டியில் நடைபெற்ற 'கம்உதாவ' கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் "ஜே.வி.பி.யினருக்கு நடந்த கதிதான் புலிகளுக்கும் நடைபெறப் போகிறது" எனஅறிவித்துள்ளார்.

இந்த யுத்தத்தைத் தொடர்ந்து கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் 1000க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் பலர் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரியவில்லை.

மகர சிறையில் சககைதிகளால் 2 தமிழர்கள் அடித்துக் கொல்லப்பட்டதும், கல்கிசை சிறையிலிருந்து களுபோவில ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்ட அடையாளங் காணப்படாத 4 தமிழ் இளைஞர்களின் சடலங்களும் கைதுசெய்யப்படுபவர்களுக்கு என்ன நடக்கிறது என்பது குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுதவிர கொழும்புவந்து திரும்ப முடியாமலும், தங்குமிடவசதிகள் கொடுக்கப்படக்கூடாது எனப் பொலிசாரால் கடுமையாக உத்தரவிடப்பட்டிருப்பதாலும் அகதிகளாக 1,500 பேர் கொழும்பில் கொச்சிக்கடை அந்தோனியார் கோவில் மற்றும் விவேகானந்தாக் கல்லூரியில் அகதிகளாகியுள்ளனர்.

இது தவிர, கொழும்பில் உத்தியோகம் பார்க்கின்ற தமிழ் இளைஞர்கள் கூட பொலிசாரால் அச்சுறுத்தலுக்குள்ளாகிவருகின்றனர்.

இது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமல்ல, மாறாக புலிகளுக்கு எதிரான யுத்தமே என்பது அரசாங்கத்தால் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டபோதும், கொழும்பிலும், சுற்றுப் புறங்களிலும் தமிழர்களுக்கெதிரான ஒருவகையான 'தாக்குதல்' நிலை பொலிசாரால் உருவாக்கப்பட்டுள்ளதை மறுக்கமுடியாது.

இந்த நிலைமைகளின் பின்னணியில் கொழும்புப் பத்திரிகைகள் மற்றும் எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரசுக்குச் சார்பான ஒரு நிலையை எடுத்துள்ளன.

இந்த யுத்தம் ஒருவகையில் தேசபக்த யுத்தமாகவும், இலங்கைப்படைகள் தேசிய பாதுகாப்புப் படையினராகவும் புகழப்படுகின்றன. தேசிய பாதுகாப்பு நிதி பெருமளவில் குவிவதாக அரசு பிரச்சாரம் செய்து வருகிறது.

இந்த விபரங்களுடன் வழ

www.tamilarangam.net

மைபோல் எனது நண்பனுடன் பேசத் தொடங்கியதும் அவன் சொன்னான்:

"புலிகளின் தூ ரநோக்க ற்ற அரசியல் மௌடீகத்தினால் இலங்கை அரசு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தற்போதைய யுத்தத்திற்கு ஆதரவையும், அதை ஒரு நியாயமான யுத்தம் என நிறுவுவதற்குரிய வாய்ப்பையும் பெற்றுள்ளது. யுத்தம் தோன்றிய திற்கான பொறுப்பை புலிகள் மீது சுமத்தவும், அதை நம்பவை க்கவும் உரிய ஒரு சூழலை கட ந்த 13 மாத காலத்தில் அர சு மிகவும் வெற்றிகரமாகச் சாதித்துள்ளது. புலிகளோ அர சின் இந்த நோக்கத்திற்கு மே லும் உதவுகிற விதத்தில் கடந்த 13 மாதகாலம் முழுவதும் செ யற்பட்டு வந்தன. புலிகள் தரப் பில் எவ்விதத்திலும் நியாயப்படு த்த முடியாத யுத்தம் இது"

இந்தக் காரமான விமர் சனத்தை தெரிவித்ததும் அவனிட ம் விளக்கம் கோரி நான் கே ட்டேன் "எப்படி உன்னால் அப் படிச் சொல்ல முடிகிறது?"

அவனிடம் எதற்கும் பதில் தயாராகவிருந்தது.

"கடந்த 13 மாதகால த்தில் அரசு புலிகள் கேட்ட எ ந்த விசயத்தை மறுத்திருக்கிறது? 6ஆவது திருத்தச் சட்டத்தை நீ க்க மறுத்ததா? மாகாணசபை-யைக் கலைக்க மறுத்ததா? ஆயு தங்களைக் கையளிக்குமாறு வலி யுறுத்தியதா? அல்லது பொலிஸ்நி லையங்களில் சிங்களப் பொலி சாரை மாற்றி தமிழ்ப் பொலி சாரைப் போடுவதைத்தான் ம றுத்ததா? எதையும் மறுக்காமல் எல்லாவற்றையும் நிறைவேற்றத் தயாராக இருந்த அரசுடன் ஏன் யுத்தத்தை புலிகள் தொடு த்தார்கள் என்ற கேள்வி ஒவ் வொருவரிடமும் எழவில்லையா?"

"சரிதான். அரசு சும்மா ஒப்புக்கொண்டதேயொழிய எ தையும் செய்யவில்லையே?"

"செய்யவில்லையா? செய் யவில்லையென்று எப்போதாவது புலிகள் சொல்லி அதை ஒரு 'பிரச்சினை'யாகப் பேசியதுண் டா? இன்னும் சொல்லப் போனா ல் புலிகளின் கண்மூடித்தனமான வரிவிதிப்பையும், கப்பம் வாங்க லையும் அரசு நியாயப்படுத்திய து. கட்சிக்குப் பண உதவி பெறு வதாக அறிவித்தது. புலிகள் தா ங்களே ஒப்புக்கொண்ட அமிர்த லிங்கம் கொலையை செய்தது புலிகள் என்பதை தாம் நம்ப வில்லையென அரசு அறிவிக்கவில் லையா? எந்தவிதத்திலும் அரசு புலிகளைத் தாஜா பண்ணுவதா கக் காட்டிக்கொள்ளவில்லையா? கடந்த மேதினத்தில் எமது இ ளைஞர்களுக்குப் பழைய ரயர் தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கு 5 நட்சத்திர ஹொட்டல் என சி றிலங்கா சுதந்திரக்கட்சி சு லோகம் போட்டு அரசை எதி ர்க்கையிலும்கூட அரசு புலிகளுட ன் பேசவில்லையா?"

www.tamilarangam.net

"நீ எப்போது அரசாங்க ஆளாக மாறினாய்?" என்று கேட்டேன் நான்.

"நான் மாறுவதல்ல பிரச்சினை. இதுதான் இப்போது பலரதும் கேள்வி. சிங்கள ஏன் தமிழ் மக்களும் கேட்கின்ற கேள்வி இதுதான்"

"நீ சொல்வதைப் பார்த்தால் தமிழ் மக்கள் அரசை ஆதரிக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பது போலல்லாவா இருக்கிறது?"

"முழுக்க முழுக்க இல்லாவிட்டாலும் அதில் ஓரளவு உண்மையிருக்கிறது. அதைச் சாதித்த பெருமை புலிகளுக்குத்தான். இனவாத அரசான பிரேமதாசவின் அரசை தமிழ் மக்களின் நண்பனாகக் காட்டியதும், பிரேமதாசவைக் கண்ணியவான் எனத் தெரிவித்ததும், அரசுடன் தாம் நடத்திவந்த பேச்சுவார்த்தையை மக்களுக்குத் தெரிவிக்காமல் வைத்திருந்ததும் புலிகள்தான். 6வது திருத்தச் சட்டமும், மாகாணசபையும்தானா தமிழ் மக்களின் பிரச்சினை? இவை இலங்கை அரசால் நிறைவேற்றமுடியாத பிரச்சினைகளா? இவற்றை நிறைவேற்றியிருந்தால் இலங்கை அரசுடன் இவர்கள் இணைந்து போவார்களா?

இவர்களின் அடிப்படைத் தவறே 'மக்கள்' என்று ஒரு முக்கியமான பகுதி எமது போராட்டத்தில் இருப்பதையே ஏற்றுக்கொள்ளாததாகும். தம்மையும், தமது ஆயுதங்களையும் விட்டால் ஒரு உலகம் இருப்பதாக நம்புவதேயில்லை. இதனால் தான் இப்படி நடந்தது.

நான் முதலே சொன்னபடி ஒவ்வொரு சந்தர்ப்பவாதத்



வெளிநாட்டில இருந்து நேற்றைக்கு உன்ரை அவரின்ட கடிதம் வந்ததில இருந்து ஒரே சந்தோசமாய் இருக்கிறாய். அப்பிடி என்ன எழுதியிருக்கிறார் உன்ரை அவர்?"

"பன்னிரண்டு வருசத்துக்கு முன்னடி நான் வெளிநாடு வரும்போது உன் வயிற்றிலிருந்த என் மகன் தற்போது இராணுவப் பொறுப்பாளனாயிருக்கிறான் என்பதையறிந்து பெருமைப்படுறதாய் எழுதியிருக்கிறார்"

— விமல்.

www.tamilarangam.net

தவறுக்கும் பதில் சொல்லவேண்டுமென்பது உறுதியாகிவிட்டது. பிரேமதாச போன்ற ஒரு அயோக்கிய னை நேர்மையாளன் என்றும், அவனது அரசை பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசெனவும் கூறிய புலிகளுக்கு அரசு தமக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள கொஞ்ச அடிப்படை-யையும் மெல்ல மெல்ல தகர்த்துவருவதைப் புரிந்துகொள்ளவே முடியவில் லை"

"புலிகள், தம்மை அரசியல் ரீதியாக அரசு பலவீனப்படுத்தி வருவதைப் புரியவில் லை என்கிருயே? அது எப்படி?"

"அது ஒரு விசித்திரம்தான். விசித்திரம் என்றவுடன் ஞாபகம் வருகிறது. விஜிதர னைப் புலிகள் கடத்திச் சென்று கொன்ற போது யாழ் பல்க லைக்கழக மாணவர்கள் சாகும்வரை உண்ணுவிரதம் இருந்தது ஞாபகம் இருக்கிறதா? அப்போது அவர்கள் ஒருசில கோரிக்கைக ளை அ னைத்து விடுத லை இயக்கங்க ளை - நோக்கியும் முன்வைத்தார்கள். எனது ஞாபகத்தில் அவற்றிலொன்று, எமக்கு பேச, எழுத, அரசியலில் ஈடுபட உள்ள உரிமையை மறுக்க வேண்டாம் என்பது. இன்னென்று பல்க லைக்கழக மாணவர்களாகிய எம்மைக் கைதுசெய்வதென்றுல் மாணவர்கள் முன் வைத்து விசாரித்துத் தண்ட னை வழங்குங்கள் என்பதாகும். இது போன்ற அடிப்படை மனித உரிமைக ளைக் கோரி . மாணவர்கள் கோரிக்கைக ளை முன்வைத்த போது புலிகள் என்ன சொன்னுர்கள் தெரியுமா?"

"என்ன?"

"இதற்குப் பதிலாக அவர்கள் வெளியிட்ட பிரசுரம் ஒன்றில் மாணவர்களின் இந்தக்கோரிக்கைகளுக்குப் பின்னுல் சிலதீய சக்திகள் இருப்பதாகத் தெரிகிறது. இந்தக் கோரிக்கைகள் விடுத லைப் புலிக ளை அரசியல் அனுதையாக்கும் கோரிக்கைகள் ஆகும் என்று எழுதினுர்கள்"

"அதற்கு..."

"அதாவது அடிப்படை மனித உரிமைக ளை மாணவர்களுக்கு வழங்கினுல் தாம் அரசியல் அனுதை ஆகிவிடுவோம் என்பது புலிகளின் அபிப்பிராயம். அதாவது தாம் 'மக்கள் விரோத ' அரசிய லைக் கொண்டிருப்பதாக அவர்கள் மறைமுகமாக ஒப்புக் கொண்டபோதும், தாம் அனுதையாக்கப்படுவோம் என்பதைப் புரிந்துகொண்டுவிட்டார்கள்.."

"ஆனுல் அது முடிந்தகதை"

"ஆம். முடிந்த கதைதான் அன்று முடிந்த கதையாகிப்போய்விட்டது போலத் தோன்றினுலும் அவர்களது நி லை இன்னும் மாறவில் லை. ஏனென்றுல் மக்கள் விரோதியான பிரேமதாசாவை கண்ணியவான் என்றுர்களே.... ஆனுல் நான் சொல்ல வந்தது அதுவல்ல. அன்று தாம்' அரசியல் அனுதையாக்கப்படுவோம்' எனப் புரிந்த புலிகளுக்கு இன்று பிரே

www.tamilarangam.net

மதாச அரசு செய்தது 'அனுதை'யாக்கும் செயல் என்று புரியாமல் போனதன் விசித்திரம் பற்றித்தான்....?" என்ற அவன் மேலும் தொடர்ந்தான்.

"இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை தொடங்கும்போதே இதனுடன் யுத்தம் செய்வது தவிர்க்க முடியாத ஒன்றெனத் தெரிந்துகொண்டு அவர்கள் பேசியிருக்க வேண்டும். அல்லது யுத்தம் தேவையில்லை. அரசுடன் சமரசம் செய்யலாம் என்ற நம்பிக்கையுடன் பேசியிருக்க வேண்டும். ஆனுல் புலிகள் ஒருபோதும் இரண்டாவதை ஏற்றுக்கொண்டதில்லை என்றே பேசுகிறுர்கள் அப்படியானுல், முதலாவதுதான் நிலைமையென்ருல் இலங்கை அரசை அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்த முயன்றிருக்கவேண்டும். மாருகப் புலிகள்தான் அம்பலப்பட்டுத் தனிமைப்பட்டு நிற்கிறுர்கள்"

"எப்படி? அரசுதான் எல்லாவற்றையும் செய்வதாகச் - சொல்லிக்கொண்டதே? எப்படி அம்பலப்படுத்துவது?"

"அதுதான் பிரச்சினை. இனவாத அடிப்படையில் கட்டப்பட்ட இந்த அரசை அம்பலப்படுத்துகிற விதத்தில் புலிகள் தமது கோரிக்கைகளை முன்வைத்திருக்க வேண்டும். இன, மத, சமத்துவம் பேசும் பிரேமாவை அம்பலப்படுத்த குறைந்தபட்சம் இலங்கையின் அரசமதமாக பௌத்தமதம் இருப்பதை நீக்குமாறு கேட்டிருக்கலாம். இது ஒரு உதாரணம். இப்படிப் பல. இதை விடவும் முக்கியமாக அரசு—புலிகள் பேச்சுவார்த்தையை இரகசியமாக வைத்திருக்க ஒப்புக்கொண்டிருக்கவே கூடாது"

"அதுதானே. பகிரங்கமாகப் பேசியிருந்தால் எல்லாம் தெரிந்திருக்கும்"

"அது உனக்கு விளங்குது. ஆனுல் புலிகளுக்கு விளங்குவதலில்லை. அவர்களுக்கு ஒருபோதும் மக்களைப் பற்றிய அக்கறையே கிடையாது. அரசை அம்பலப்படுத்துவதில் உள்ள முக்கியத்துவம் அவர்களுக்குத் தெரிவதில்லை"

"அப்ப என்ன நடக்குமென்று சொல்லுருய்?"

"புலிகள் மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்கக் கற்றுக்கொள்ளும்வரை, மக்களைவிட உயர்வானது எதுவும் இல்லையெனப் புரிந்துகொள்ளும் வரை யுத்தம் எமது வாழ்வின் விதியாகவே இருக்கும்"

"அரசாங்கம் புலியை அழித்துவிடாதா? இப்பவே வவுனியாவரை பிடித்துவிட்டதே?"

"புலிகளை முடக்கலாம். அழிக்க முடியாது. அது தமிழ்மக்களின் போராட்டத்தோடு சம்பந்தப்பட்டது. புலிகளும் அரசை தாக்கலாம், வெல்ல முடியாது. ஏனென்ருல் அது மக்களின் பங்களிப்போடு சம்பந்தப்பட்டது"

எனக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை.

(தொடர்ச்சி 49 ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வை

# சுகனின் இரண்டு சிறுகதைகள்

ஒரு கதை: "மூரி"
(நமது குரல். 24)

மற்றையது: "பஞ்சமியில் செத்தவர்களும் வாழ்வும்"
(பள்ளம். 2)

"இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் ஆகக் குறைந்தது ஒரு சிறுகதையேனும் எழுத முடியும்" என்று ஒருமுறை இலக்கிய விமர்சகர் நித்தி சொன்னது சுகனின் கதைகள் இரண்டையும் ஒன்றுசேரப் படித்தபோது மீண்டும் என் நினைவிற்கு வருகின்றது.

ஆழப்பதித்த இளமைக்கால ஆணிப் பதிவுகள் முனகல் வேதனையுடன் கூடிய ஒருவகை இன்பஉணர்வையும், கூறு பிரித்துப் - பார்க்கும்போது அன்றைய வயது, சூழல், வாழ்வியல் முறை, அதையொட்டிய சிந்தனைகள், உணர்வுகள் என்ற பல்வேறு காரணிகளின் தாக்கத்தையும், நம் ஒவ்வொருவருக்கிடையேயும் அவற்றின் வேறுபாடுகளையும்..... என்று பலவற்றைத் தந்துகொண்டேயிருக்கும்.

கடந்துவிட்ட காலத்தின் வாழ்வுக் கீறல்களை, நடந்து - கொண்டிருக்கும் காலத்தோடு ஒப்பிடுகையில் சிலவேளை உயிரோட்டமானதாகவோ அல்லது அறியாமையையும், இயலாமையையும் நினைத்து வெட்கப்படவேண்டியதாகவோ, பெருமையும், சந்தோசமும் படக்கூடியதாகவோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் என்னென்னவோ தரக் கூடியதாகவோ இருக்கின்றன.

இவை யாவும் மனித அனுபவங்கள். மனித குல அனுபவங்கள். ஒவ்வொரு சக மனிதருக்கும் அடுத்தடுத்த தலைமுறை மனிதருக்கும் தெரியப்படுத்த வேண்டிய தனிமனித அந்தரங்கங்கள்.

நான் கண்ட காட்சிகளும் நான்பட்ட பாடுகளும் உங்கள் காட்சிகளிலும், பாடுகளிலுமிருந்து வேறுபடலாம். அவ்வாறே சுகனின் பாடுகளும், காட்சிகளும், அனுபவங்களும் நம் எல்லோரிடத்திலிருந்தும் கூட வேறுபடலாம்.

இவற்றைப் பதிவு செய்ய சுகன் தேர்ந்தெடுத்த இலக்கிய வடிவம் சிறுகதை. அவ்வாறே ஒவ்வொருவரும் தம் அனுபவங்களை ஓர் இழையில் கோர்த்து கொடுக்கின்றபோது, உலகில்

ஒவ்வொருவரும் ஆகக் குறைந்தது ஒரு சிறுகதையேனும் எழுதலாம்தானே!

நமது குரலில் வெளியாகிய "மூரி" எனும் சிறுகதையில் தாயைத் தின்னிப் பொடியொன்றின் இறந்தகால அனுபவமொன்று எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

புல்லுச் செருக்கி, நெஞ்சுநோ வைச்சு, புருசனைத் தின்னி தாயானவள் செத்துப் போக, பெரியாச்சியுடன் பொடி ஆட்டுகல்லுக் குழியில் துலாக்கிணறு விளையாடியும், அவவுடன் வயலுக்கு போய் வரம்பிலோடிச் சுண்ணாம்பு வாங்கியும், தாயோடு புல்லுச் செருக்கிய ஏனைய பெண்களைக் கண்டு 'தாயைத் தின்னி' என்ற அனுதாபத்தை விரும்பிப் பெற்றும், (குழையோ, கூழமோ வயலுக்குத் தாட்டு, அவை மண்ணோடு மண்ணாகி உக்கிவிட, உக்காது முண்டமாக எஞ்சிக் கிடக்கும் - எரிக்கப் பயன்படும் ) மூரியை ஓடி ஓடிப் பெரியாச்சியைவிட அதிகமாகச் சேர்த்தும் .... இவை எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கின்றான் - பையன். இதுதான் கதை.

சிறுகதையொன்றில் சொற்கள் எழுதப்படுவதில்லை. செதுக்கப்படுகின்றன. "முதலாவது பக்கத்தில் தோளில் துப்பாக்கி தொங்கினால் அது ஆகக் கூடியது மூன்றாவது பக்கத்தில் வெடித்துவிட வேண்டும். இல்லாவிடின் தோளில் துப்பாக்கி தொங்கியது என்று எழுதத் தேவையில்லை" என ஓர் ஆங்கில விமர்சகர் கூறினாராம்.

சிறுகதையில் எழுதப்படும் சொற்கள் யாவும் கதையின் கருவுக்கு ஆதாரமாகத் தெரிந்து தெரிந்து செதுக்கிச் செதுக்கி எடுத்து வைக்கப்படுகின்றன.

அப்படியாயின் எந்தச் - சொல்லும் தேவையற்று மூரியாக எங்கும் நீட்டிக்கொண்டிருக்க முடியாது. அத்தனையும் அவசியமானவை. ஒன்றை நீக்கினாலும் அது துலக்கத்திற்கு இடையூறாக அமைந்துவிடுமாறு சிறுகதையில் சொற்கள் அமைந்திருக்கும்.

எனவே சுகனின் இச் சிறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதையில் வரும் உழவாரம், அறு கம்புல், கிடைச்சிக்கட்டை, மண்ணுங்கட்டி, நார்க் கடகம், தென்னம்மட்டை, ஆட்டுக்கல்லு, கொட்டைப்பெட்டி போன்றவையும் அவ்வாறுதானு?

அந்நியமாகிப் போன நமது கலாச்சாரச் சொற்கள் பல நினைத்த மாத்திரத்தில் நினைவிற்கு வர மறுக்கும். அவற்றை ஆங்காங்கே பிரதேசவழக்குச் சிறுகதைகள், நாவல்கள் போன்றவற்றைப் படிப்பதால் மீண்டும் மறுபதிவு செய்து சிந்தனையில் நிறுத்தலாம்.

அந்தவகையில் மீண்டும் உழவாரத்திலிருந்து கொட்டைப்-பெட்டிவரை நினைத்துப் பார்த்தேன். இப்படி நினைத்துப் பார்க்க மட்டும்தான் சுகனின் கதை உதவியது என்றும் சொல்ல முடியாது.

## பசுபதி சிவலிங்கம்

புல்லுச் செதுக்கி நெஞ்சு நோ வைச்சுச் செத்துப்போன தாயின் மீது இரக்கம்; ஆட்டுக் கல்லுக் குழியில் மக்கிமண்போட்டு, தென்னம்மட்டையில் விளையாட்டுத் துலா செய்து, பயந்து, மிரண்டு வரம்பில் விழுந்தெழும்பி ஓடி, காலிலும் கட்டை இரண்டு தரம் ஏறி, எல்லாவற்றையும் ஏக்கத்தோடு பார்க்கும் சிறியவனில் ஆதங்கம்; பெரியாச்சியின் மீது ஒரு கழிவிரக்கம்.. இவையும் எனக்கு ஏற்படத்தான் செய்தன.

முரி என்று நான் கருதுவதும், அந்தப் பெரியாச்சியும், பெடியனும் சேர்த்த பொருளும் ஒன்றுதானு என்பதில் கூட எனக்கு இன்னமும் சந்தேகம் இருக்கிறது.

தமிழில் கரிசல் சீமைப் பிரதேச வழக்குக ளைக் கதையில் அறிமுகப்படுத்திப் பின்னர் கரிசல் நில வட்டார வழக்குச் சொல்லகராதி தந்த கி. ராஜநாராயணனைப் போல சுகனும் பின்னொரு காலத்தில் செய்யக் கூடும்.

இருப்பினும் சுகனின் முரி வெறுமனே - உழவாரம், அறுகம்புல், கிடைச்சிக்கட்டை, மண்ணுங்கட்டி, நார்க்கடகம், தென்னமட்டை, ஆட்டுக்கல்லு, கொட்டைபெட்டி - இங்கே பலபேருக்கு கைவந்துவிடமுடியாத சொற்கலவை.

எவ்வாறு அலங்கார வார்த்தைகளால் மயக்கமும், மாயாஜாலமும் காட்ட முடிகிறதோ அவ்வாறே இந்தக் கலாச்சாரச் சொற்களால் சிறுகதை போன்று மாயம் காட்டுவதையே நான் இந்தக் கதையிலும் காண்கிறேன்.

"... உக்கின முரி, கறுத்த முரி, பெரியாச்சி பொறுக்கின முரியிலும் பார்க்க எனது முரிக் கும்பல் மிகப் பெரியது" என்று கதை முடிகிறது.

(தொடர்ச்சி 49 ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விரலை கொழுக்கிக்குள் விட்டு நெம்பினான். சின்னத் தகடு கையோடுவர, பன்ரா கொப்புளித்தது. வாயை வைத்து உறிஞ்சிய முத்து பானெவ் பக்கமாக நடந்தான்.


மழை விடுவதற்கான ஆயத்தங்கள் ஆகாயத்தில் மேற் - கொள்ளப்பட்டிருந்தாலும், புழுக்மாயிருந்தது. ஜேமன் வெதர் !

நான்கு நாட்களாய் வெளியே வெளிக்கிடாமல் விடுதிக்குள் முடங்கிக் கிடந்ததில் மயங்கிக் கிடந்த சுவாசப்பைகள் ஆனந்தமாய் ஒட்சிசனை உள்வாங்கிக் கொள்ள, முத்து பன்ரா - வை விட்டுவிட்டு உறிஞ்சியபடி நடந்தான்.

ஏதோ வழிகளில் சோசல் காசெல்லாம் முடிந்துவிட, படுத்துக் கிடந்தவன், இன்று சோசல் காசெடுத்ததும், சின்ன மகிழ்ச்சியுடனும், விடுவிப்புடனும் உலாவ விரும்பினான்.

எடுத்த காசு எப்பவும் முடியலாம். இதெல்லாம் சொல்லிக் கொண்டா? மறுபடி முடங்குவதற்குள் கொஞ்சம் ஆறுதலாய் ....

இரவு நடக்கப் போகும் உலக உதைபந்தாட்டத்தில் - டொச்லாண்ட் வென்றுவிடும் என்ற திடத்துடன் ஒரு கையில் வைன் போத்தலுடனும், மறுகையில் டொச் கொடியுமாக சிலர் போனார்கள். திடீரென ஞாப



# கனவை மிதித்தவன்

-பார்த்திபன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்துக்கு வந்தமாதிரி "ஒலே யோ லேயோ லேயோ..." என்று கோரஸாகக் கூவினர்கள்

பாஞெவ்வுக்கு முன்னல் போட்டிருந்த வாங்கில் கறுப்பு தலைகள். இரண்டொருவர் நின்று கொண்டுமிருந்தனர்.

முத்து அவர்களையடைந்த போது, அங்கு சம்பாசணைகள் இடைவேளையைத் தாண்டியிருந்தன.

"எனக்கு அப்பவே தெரியும் பிரேமதாச உப்பிடிச் செய்வானெண்டு" (83ஆம் ஆண்டிலிருந்தே என்ன நடந்தாலும் தனக்கு அப்பவே தெரியும் என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறர். தீர்க்கதரிசி வேக்கன்சிக்கு அப்ளை பண்ணியிருக்கலாம்!)

"என்னெண்டாலும் அழியிறது சனங்கள்தானே?"

"அதெண்டால் மெய்தான்"

"பாவம் சனங்கள்"

இந்த இடத்தில் இடைவெளிவிட்டு, மௌன அஞ்சலி செய்வதுபோல் பேசாமலிருந்தார்கள்

முத்து சத்தம் எழுப்பாமல் பன்ராவை உறிஞ்சினன். பன்ராவுக்குள் புதைக்கப்பட்டிருந்த காபனீரொட்சைட் சொல்லாமல் கொள்ளாமல் மூக்கால் வெளியேற, மெலிதாக அதிர்ந்தான்

"இந்தமுறையும் இந்தியா வராது"

"வந்தவங்களை கலைச்சு போட்டு..."

"கொலைகாறச் சனியனுகள் எண்டு நீதானே திட்டினனீ"

"அது அப்பவல்லோ"

"சனங்களெல்லே பாவம்"

இப்படி அடிக்கடி சனங்கள், சனங்கள் என்று சொல்ல, சனங்களுக்குப் பேயாய் தும்மாதோ என்று முத்து யோசித்தான். இலங்கையிலை இருக்கையிக்கையும் சனங்கள், சனங்கள் எண்டாங்கள். இங்கயும் சனங்கள் எண்டுறுங்கள். இயக்க நோட்டீசுகளிலயும் சனங்கள். அரசாங்கவறிக்கையிலயும் சனங்கள். இவ்வளவு பேமஸான சனங்களை ஒரு நாள் சந்திக்காமல் விடுறயில்லை என்று முத்து தீர்மானித்துக் கொண்டபோது கூடவே அப்ப நாங்கள் ஆர் என்ற கேள்வியும் உதித்துத் தொலைத்தது.

"அப்ப கடைசி நியூஸ் என்னவாம்?"

"வீரகேசரியில கிடக்கு கிழக்கை ஆமி பிடிச்சிட்டுதாம்"

"இயக்க இன்பமேசன் சொல்லுது கடை இடிஞ்சுபோச்சாம். பாமஸி உடைஞ்சு போச்சாம். தியேட்டர் எரிஞ்சு போச்சாம். ஆமி பின்வாங்கினதாம். தங்கடை தரப்பிலை இழப்பில்லையாம்"

"நான் வேற இயக்க இன்பமேசனுக்கு அடிச்சனன். அரசாங்கத்திலை சொட்டுப் பிழை

www.tamilarangam.net

யும் இல்லையாம். இவைதானும் தொடங்கினது"

"அப்ப சனங்களைப் பற்றி ஒருதருக்கும் அக்கறையில்லையே?"

"பாவம் சனங்கள்"

முத்து முழுவதையும் குடித்து முடித்தபின், பேணியை இயலுமானளவு நசுக்கி, வாங்கிலிருந்தபடியே குப்பைத் தொட்டிக்குள் குறிபார்த்து எறிய, அது விளிம்பில் மோதி வெளியில் உருண்டது அருகில் நாயுடன் போன ஸ்ரைலான மூதாட்டி இவனைப் பார்த்து சத்தமில்லாமல் ஏசிவிட்டுப் போனாள்.

"பி. பி. சி கேட்டனியே"

"இல்லை. டொச் நியுஸ் தான் கேட்டனான்"

"ரி. வி. யிலை ஏன் இன்னும் போடேலை?"

"படங்கள் கிடைக்கேலையாக்கும்"

"இஞ்சபார் கடையள் பூட்டப் போறாங்கள். மனிசி தேங்காய் வேண்டியரச் சொன்னது. நான் இதில கதைச்சுக்கொண்டு நிண்டிட்டன்"

"நானும் சுவிசுக்கொருக்கா ரெலிபோன் அடிக்க வேணும்"

ஒவ்வொருவராகக் கழன்றுபோக, சந்திரனும், முத்துவுமே மிஞ்சியிருந்தார்கள். "என்னடாப்பா யோசிக்கிறாய்?"

"வீட்டுக்காறர் இப்ப எங்கையெண்டும் தெரியேலை. அதுதான் யோசினையாயிருக்கு!" சந்திரன் சொல்ல, முத்துவுக்கும் வீட்டு ஞாபகம் வந்தது. கலவரங்கள் வந்தால்தான் வீட்டுயோசினைகள் எல்லாம் தன்னாலை வரும்போல.

அம்மா.

அக்கா.

. . . . . .

இப்ப திரும்பவும் வீட்டை விட்டு ஓடியிருப்பினம். பள்ளிக்கூடத்துக்கையோ, கோயிலுக்கையோ எல்லாச் சனங்களுமாய் கூடி, ஒராளுக்கு ஒராள் ஆறுதல் சொல்லி, கஞ்சி காய்ச்சி. . . .

படுக்கிறதும், எழும்பிறதும் திருப்பி படுக்கிறதும், எழும்பிறதும் எப்பிடி இஞ்ச இருக்கிற அகதியளின்ரை நடைமுறையாய்ப் போச்சோ. . . அப்பிடியே அங்கை நாட்டிலை இருக்கிற சனங்களின்ரை வாழ்க்கையும். . . . அகதியாய் ஓடுறதும், திரும்பிவாறதும், திருப்பி ஓடுறதும், பய்பிடுறதும், சாகிறதும். . . .

அங்கையும் சரி, இங்கையும் சரி. ஒரு அச்சிலை சுழலுற சில்லு மாதிரி. . . வட்டம் விலகாத வட்டங்களாய் வாழ்க்கை

"நாட்டிலை என்ன மாறினாலும் அழிவுகள் மாறேலைப் — பாத்தியே?"

"அப்பிடியென்ன மாறினது அழிவுகள் நிக்கிறதுக்கு? ஜனாதிபதி

www.tamilarangam.net

மாறினார். அமைச்சர்மார் மாறிச்சினம். இயக்கங்கள் மாறிச்சுது ஆமி மாறிச்சுது. இதைவிட வேற என்ன அப்பிடிப் பெரிசா மாறினது..?"

"பேச்சுவார்த்தை, சமாதானம், போர்நிறுத்தம் எண்டெல்லாம் குழையடிச்சாங்கள். படம் செக்கன்சோ ஓடுது. திருவிழாவுகள் நடக்குது. நிர்வாகம் எல்லாம் ஒழுங்கு எண்டாங்கள்!!

"இப்பிடி இப்ப மட்டுமே சொல்லுயினம். இந்தியனாமியோடை திரிஞ்சவையும் இதைத் தானே சொன்னவை. இப்ப சிலோன் ஆமியோடை திரிஞ்சவையும் இதைத்தான் சொன்னவை. இவை எல்லாரும் மாறி மாறி சமாதானம், அமைதியெண்டு – சொன்னாலும் சாமான் ஒண்டுதான். பிறண்ட்தான் வித்தியாசம்"

"அரசியலெண்டாலே அழிக்கிறதெண்டு போச்சு"

"அப்பிடியில்லை. அழிக்கிறதுதான் இப்ப அரசியலாய்ப் போச்சு"

வானம் முதலில் சில துளிகளைத் தூதனுப்பி தன்னுடைய ஆட்டத்தைத் தொடங்கப்போவதாக அறிவித்து. பத்தாததற்கு மின்னிச், சப்தித்தது.

"மழை ஊத்தப் போகுது நான் றூமுக்குப் போகப்போறன்"

"நானும்"

இருவரும் வேறு வேறு

---

( 42ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியாகக் கிடைத்த செய்திகள் திரும்பத் திரும்ப என்னுள் சுழன்றன.

'பலாலியிலிருந்து இராணுவம் வெளியேறத் தொடங்கியுள்ளது. ஷெல்லடியும், பொம்பரிலிருந்து குண்டு வீசுதலும் தொடர்கின்றது. திருமலை, வவுனியா, யாழ்ப்பாணம்.. எல்லா இடங்களிலும் மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

எத்தனை நாளைக்குத்தான் இந்த 'மரணத்துள் வாழ் – வோம்' நிலை நீடிக்கப் போகிறது?

ஒன்றுமே புரியவில்லை.

( 45ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைனமற் வைச்சாலும் என்ன சொல்லப்பட்டது என்பதை யாரும் கண்டுபிடித்துவிட முடியாதவாறு சம்பவங்களை எழுதியிருக்கும் சுகனிடம் சொல்லாட்சியும், கதைப் பாங்கும் இருந்தும் கதை சொல்லும் உத்தியை, விளங்கவைப்பதை இன்னும் விருத்தி செய் என்றே சொல்லத் தோன்றுகிறது – கரு ஒன்றையும் வைத்து !

(தொடர்ச்சி அடுத்த கலத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதிகள் என்பதால், வெவ்வேறு திசைகளில் போனார்கள்.

முத்து அறைக்கு வந்த - போது ரி.வி.யைச் சுற்றிப்பலர் ஆரவாரமாயிருந்து உதைபந்தாட்டம் ஆடிக்கொ... இல்லை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"பதினொராம் நம்பர் சாத்துவான்"

"கோலியும் சுப்பர்"

"டொச்லாண்ட் தோக்க வேணும்"

"என்ராப்பா அவங்கடை விளையாட்டு நல்லாயிக்குதா- னே?"

"அது பிரச்சினையில்லை. டொச்லாண்ட் தோக்கவேணும்" டொச் அரசாங்கம் தங்களை இப்படி எதுக்கும் வகையற்றவர்களாக்கிவிட்டதே என்பதில் - டொச்லாண்ட் என்பதில் ஒருகாழ்ப்பு.

உடுப்பு மாற்ற யோசித்த முத்து பிறகு அந்த யோசி- னையை மாற்றிக்கொண்டு, சப்பாத்தைக் கழட்டியபின் செற்றியில் வசதியாகக் குந்தினான். விளையாட்டில் கவனம் செலுத்தமுடியாமலிருந்தது.

இப்ப சிலோனிலை என்ன நேரமாயிருக்கும்? இரவு பத்தரை? கரண்டை நிப்பாட்டிப் - போட்டாங்களாம். அப்ப அகதியள் இருக்கிற இடத்திலை எப்ப வெளிச்சம் வரும்? என்னத்தைச் சாப்பிடுங்கள்? ஆரார் காயம் பட்டினமோ? ஆரார் இருக்கின- மோ? விடுதலை வேணுமெண்டு தொடங்கின போராட்டம் இப்ப கடைசியா.....

"சைஸ! உவ்வள்வு தூரம் மினக்கெட்டு கொண்டு வந்திட்டு கடைசியிலை கையிலை குடுத்திட்டுப் போறான்"

"டொச்லாண்ட் செக்கோவுக்கு காசைக்குடுத்து ஆக்களை வேண்டியிட்டுது போலை"

"செய்திருப்பாங்கள். இப்பெல்லாம் விளையாட்டே நடக்குது? சிலவேளை அடுத்த வேர்ல்ட் மாஸ்ரருக்கு பந்தைத் தூக்கி ஒரு மூலையிலை பத்திரமாய் வைச்சுப்போட்டு றெசிலிங்தான் நடத்தப் போறுங்கள். இருந்து பார்"

"இவன் ஆள் பேக்காய் என்ன மாதிரி தூரநோக்கோடை பாக்கிறன். பாத்தியே?"

"சும்மா நக்காதை"

அவர்களுடைய ஆரவாரத்தில் முத்துவும் நாட்டு நிலவரங்கள் கலந்து ரி.வி. பார்க்க வேண்டியதாயிற்று.

டொச்லாண்ட் வென்று விளையாட்டு முடிந்த கையோடு இரவுச் சமையல் யார் தலையில் என்ற பிரச்சினை எழுந்தது.

"அடுத்த மச்சும் திறமாயிருக்கும்"

"கதையைவிட்டிட்டு கறியை வை"

(இன்னும் வரும்)

www.tamilarangam.net

# தூண்டில்

யூலை 1990 இதழ்: 31

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி ............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

## சந்தா விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| மேற்கு ஜேர்மனி: | 6 மாதங்கள் | ... | 20,- டி.எம் |
| | 1 வருடம் | ... | 38,- டி.எம் |

வங்கி முகவரி: Stadtsparkasse
Dortmund.
கிளை இல: BLZ 440 501 99
கணக்கு இல: 571 001 799

| | | | |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள்: | 6 மாதங்கள் | ... | 25,- டி.எம் |
| | 1 வருடம் | ... | 48,- டி.எம்ம் |
| ஏனைய நாடுகள்: | 1 வருடம் | ... | 50,- யு.எஸ்.டொலர் |

தபாற்கந்தோர் முகவரி: Postscheckamt
Dortmund
கிளை இல: BLZ 440 100 46
கணக்கு இல: 308 074 68

குறித்த சந்தாவுக்கான உங்கள் நிதியை தூண்டில் முகவரிக்கு அனுப்பி வைத்ததும் அது குறித்த கடிதம் மூலம் அறிவிப்பதனால் சஞ்சிகையை அனுப்புதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ள உதவலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலநிலை பற்றிய சிறுகுறிப்புகள்

உடல் குளிர்ந்து போகாது
மூச்சுக் காற்று
எப்போதும்போல இன்னும் சூடாகவே.

'சூடு' பற்றிக் கதைப்பது
தவிர்க்கப்பட்டுள்ளதால்
'குளிர்' பற்றிக் கதைத்தலும்
சூட்டைக் குறிப்பதாகவே
கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இது;

'இல்லாதிருத்தல்' பற்றிக் கதைத்தல்
'இருத்தல்' பற்றிக் கதைப்பதைப்போல.

'மிருகம்' பற்றிக் கதைத்தல்
'மரணம்' பற்றிக் கதைப்பதைப்போல.

இன்றைய
பலமான காற்றின் பின்னர்
பெருமழை வருதல் தவிர்க்க முடியாததாகையால்,
விறகு பொறுக்குவதற்கு முன்
வாய்க்கால்கள் 'திருத்தப்படல்' வேண்டும்.

சுகன்